பக்கங்கள் : எட்டு + XVI

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 13 வெள்ளிக்கிழமை (29.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 276

# புலிகளை முற்றாக தோற்கடிக்க காலவரையறை விதிக்க முடியாது!

## படை நடவடிக்கை தொடரும் என்கிறார் கோத்தபாய



கொழும்பு, ஓகஸ்ட் 29

"வன்னிப் பிரதேசம் முழுவதையும் புலிகளிடமிருந்து மீட்டு - அவர்களை முற்றாகத் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு - காலவரையறை ஒன்றை விதிக்க முடியாது. அவ்வாறு விதிப்பது மகா முட்டாள்தனம்" இப்படித் தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இருப்பினும், சரியான திட்டமிடலின் கீழ் - வெற்றிகரமான முறையில் - யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது என்றும், கடும் பயிற்சி பெற்ற படைவீரர்களின் முன்னிலையில் புலிகளின் யுத்த தந்திரம் எடுபடாது என்றும் அவர் சொன்னார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உணவுத்தட்டுப்பாடு என்பது பொய்; இடம்பெயரும் மக்கள் வவுனியாவில் தங்க ஏற்பாடு

### அரச தரப்பில் அறிவிப்பு

கொழும்பு, ஓக.29

"வன்னியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்று யார் சொன்னது? அது பச்சைப்பொய். தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன."

இப்படித் தெரிவித்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

வன்னியில் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அரசு முன்னெடுக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த விடயங்களைக் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வன்னியில் யுத்தம் தீவிரமடைந்துள்

(08ஆம் பக்கம் பார்க்க)



## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 29

நல்லைக் கந்தன் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது. முருகப்பெருமான் காலை 8 மணிக்கு தேரில் ஏறி பக்தர்களுக்கு அருள்காட்சி வழங்குவார்.

அதிகாலை முதல் பூசைகள் இடம்பெற்று 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று வள்ளி, தெய்வானை சகிதம் முருகன் 8 மணிக்கு தேரில் ஆரோ

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கை மீட்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடையும் நிலைக்கு வந்துள்ளன

### பசில் ராஜபக்ஷ சொல்கிறார் இப்படி



கொழும்பு, ஓக.29

பயங்கரவாதிகளிடமிருந்து வடக்கை மீட்டெடுக்கும் மனிதாபிமான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து வரும் அதே வேளையில், அப்பிரதேசத்தின் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கில் பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான இயந்திர உபகரணங்களைப் படையினரிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார் என அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத் தலைமையகத்துக்கு அருகிலுள்ள மைமதனத்தில் இயந்திர உபகரணங்களை வழங்கும் மேற்படி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அங்கு பேசுகையில் பசில் ராஜபக்ஷ

(08ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாமில் உணவில் நஞ்சு; 272 படையினர் சுகவீனம்

அம்பாறை, ஓக.29

அம்பாறை மாவட்டம் தெஹியத்தகண்டிய ஹெனனிகல இராணுவ பயிற்சி முகாமைச் சேர்ந்த 272 இராணுவத்தினர் உணவு நஞ்சானதால், மோசமாக உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று, காலை உணவிற்குப் பின்னர் இராணுவத்தினர் திடீரென சுகவீனமுற்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையைக் கைப்பற்றிவிட்டோம் - படையினர் முன்நகர்வை முறியடித்துவிட்டோம் - விடுதலைப்புலிகள்

கொழும்பு, ஓக.29

வவுனியாவில் பாலமோட்டை பகுதியை முற்றாக தமது கட்டுப்பாட்டில் படையினர் நேற்றுக் கொண்டுவந்தனர் என்று நேற்று மாலை பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இதேவேளை-

பாலமோட்டை மற்றும் குஞ்சுக்குளம்

(08ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்
XVI + 8
மொத்தம்
24 பக்கங்கள்




சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி
வருகின்றது "மீண்டும் வாழ்வோம்",
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள்; யாழ். பாடசாலைகளுக்கு 20 முதலிடங்கள்

வவுனியா, ஓக. 29

வவுனியாவில் நடைபெற்று வரும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் நேற்று இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் 20 போட்டிகளில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் முதலிடம் பெற்றுள்ளன.

15 போட்டிகளில் இரண்டாம் இடங்களையும் யாழ். பாடசாலைகள் தட்டிக் கொண்டன.

வவுனியா கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**பெண்கள்**

* 1500 மீ - 17 வயது - ஆர்.காவேரி (அருணோதயா), எஸ்.செல்வராசினி (கச்சாய் ஜி.ரி.எம்.எஸ்.).
* உயரம் பாய்தல் - 17 வயது - எஸ். தனுஜா (அருணோதயா), எஸ்.நிசாந்தினி (சாவகச்சேரி றிபேர்க்).
* குண்டுஎறிதல் - 15 வயது - எஸ்.கீர்த்திகா (யூனியன்), என்.சாமந்தி (நெல்லியடி ம.ம.வி).
* 100 மீ - 13 வயது - ஜி.கஸ்தூரிக்கா (சுண்டுக்குழி மகளிர்).
* 100 மீ - 17 வயது - இரண்டாமிடம் - எஸ்.பகீரதி (இளவாலை கன்னியர் மடம்).
* 100 மீ - 11 வயதுப்பிரிவு - ஏ.பிரியதர்சினி (சுண்டுக்குழி மகளிர்).
* தட்டெறிதல் - 17 வய்து - சி.யசோதா (வாதரவத்தை விக்கினேஸ்வரா).
* நீளம் பாய்தல் - 17 வயது - வி.நிரோஜினி (மீசாலை வீரசிங்கம்).
* உயரம் பாய்தல் - 11 வயது - இரண்டாம் இடம் - எம்.பிரியங்கா (சுண்டுக்குழி மகளிர்).
* 400 மீ - 17 வயது - இரண்டாம் இடம் - ஆர்.காவேரி (அருணோதயா).
* 400 மீ - 15 வயது - இரண்டாம் இடம் - ஆர்.தவசுதா (கொக்குவில் இந்து).
* அஞ்சலோட்டம் 4x100 - 15 வயது - இளவாளை கன்னியர் மடம், 13 வயது - சுண்டுக்குழி மகளிர், 17 வயது - அருணோதயா.

**ஆண்கள்**

* ஈட்டி எறிதல் - 15 வயது - கே.மவுஸ்கீரன் (மகாஜனா), எஸ்.கோகுலன் (கொக்குவில் இந்து)
* நீளம் பாய்தல் - 11 வயது - இரண்டாம் இடம் - பி.சுஜித் (நெல்லியடி ம.வி).
* 100 மீ - 15 வயது - சி.ஆர்.மதன் எல்விஸ் (சென்.பற்றிக்ஸ்), ரி.மதுசன் (மட்டுவில் தெற்கு சரஸ்வதி).
* 100 மீ - 17 வயது - பி.ஜக்சன் (சென்.பற்றிக்ஸ்), ஏ.வி.எடின் (யாழ். சென்றல்).
* குண்டு எறிதல் - 15 வயது - ஜி.நிலக்சன் (யாழ்.இந்து), எஸ்.டிலக்சன் (வசாவிளான் சென்றல்).
* ஈட்டி எறிதல் - 17 வயது - ஏ.வஜிந் (ஹாட்லி).
* உயரம் பாய்தல் - 11 வயது - எஸ். டிலக்சன் (மகாஜன).
* குண்டு எறிதல் - 17 வயது - பி. பானுப்பிரியன் (சென்.ஜோன்ஸ்), ஆ.சுஜீவன் (யாழ்.இந்து).
* 400 மீ - 17 வயது - பி.ஜக்சன் (சென்.பற்றிக்ஸ்), ஏ.நாகராஜ் (கரவெட்டி ஞானாசிரியர்).
* 4x100 அஞ்சலோட்டம் - 13 வயது - இரண்டாம் இடம் - ஹாட்லி, 15 வயது - யாழ்.சென்றல், 17 வயது - யாழ்.சென்றல்.

## நல்லை ஆதீனத்தில் இன்றும் நாளையும் இசை நிகழ்வுகள்

நல்லைக் கந்தன் ஆலய தேர்த்திருவிழாவை ஒட்டி நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஏற்பாட்டில் விசேட இசை நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

காலை 9.00 மணி முதல் கந்த புராண படலம் குரு மூர்த்தி ஆலயத்திலும் 10.00 மணி முதல் அன்னதானம் அன்னதான மண்டபத்திலும் 9 மணி - 3 மணி வரை இசை நிகழ்வுகள் ஆதீன கலா மண்டபத்திலும் இடம் பெறவுள்ளன. (1)

## சேமிப்பு வங்கியில் குதூகலக் கணக்கை ஆரம்பிப்பதில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஓக. 29

தேசிய சேமிப்பு வங்கி புதிதாக அறிமுகம் செய்துள்ள குதூகல சேமிப்புக் கணக்குத் திட்டத்தில் பருத்தித்துறைக் கிளையில் ஒரே நாளில் 171 பேர் இணைந்துள்ளனர்.

மேற்படி புதிய கணக்கு ஆரம்பிக்கப்பட நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டும் 171 வாடிக்கையாளர்கள் 58 லட்சத்து 14 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டுள்ளனர் என்று கிளை முகாமையாளர் 'உதயனுக்'குத் தெரிவித்தார். (அ-1)

## விடத்தற்பளையில் கால போக செய்கைக்கு படையினர் அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 29

தென்மராட்சி கிழக்கு விடத்தற் பளை நெல் வயல்களில் இவ் வருடம் கால போக நெற் செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ் வருடம் கால போக நெல் செய்கை மேற்கொள்ள அனுமதி பெற்றுத் தருமாறு தென்மராட்சி பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபருக்கு அப்பகுதி நெற் செய்கையாளர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

விடத்தற்பளை கமக்கார அமைப்பினர் அப் பகுதி படை உயர் அதிகாரிகளுடன் நேரில் கலந் துரையாடியதை அடுத்து நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

## தேவாரப்பண்ணிசை

யாழ்ப்பாணம், ஓக. 29

அகில இலங்கைத் திருமறை மன்றம் வருடந்தோறும் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான மகோற்சவ தீர்த்தத்திருவிழாவன்று நடத்திவரும் தேவாரப் பண் இன்னிசைக் கோஷ்டி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆலய முன்றலில் ஆரம்பித்து வீதி வலம் வரும். (1)

## 'நவமணி' ஆசிரியர் அஸ்ஹர் காலமானார்



கொழும்பு, ஓக. 29

'நவமணி' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். அஸ்ஹர் ஹாஜியார் (வயது 61) நேற்றுக்காலை வெல்லம்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் மாரடைப்பால் காலமானார்.

41 ஆண்டுகள் ஊடகத்துறையில் சேவையாற்றிய அஸ்ஹர், நவமணியில் இணையும் முன்னர் 25 வருடங்கள் 'தினபதி' மற்றும் 'வீரகேசரி' பத்திரிகைகளில் நாடாளுமன்றச் செய்தியாளராகப் பணிபுரிந்தார்.

ஒரு ஆண் மற்றும் 4 பெண்பிள்ளைகளுக்குத் தந்தையான அஸ்ஹர் தமது சேவைக்காலத்தில் 'நாடாளுமன்ற அனுபவங்கள்' மற்றும் 'முஸ்லிம்களின் நோன்பு' போன்ற நூல்களையும் எழுதியிருந்தார்.

பல முஸ்லிம் மற்றும் தமிழ் அமைப்புகள் அவரது சேவைகளைப் பாராட்டும் முகமாக அவருக்குக் பல கௌரவங்களை வழங்கியிருந்தன.

அவரின் ஜனாஸா நல்லடக்கம் மாளி வத்தையில் உள்ள முஸ்லிம் மையவாடியில் நேற்றுமாலை இடம்பெற்றது.

அவர் இறப்பதற்கு முன்னர் - நேற்று முன்தினம் இடம்பெற்ற - சிரேஷ்ட வானொலி அறிவிப்பாளர் அஷ்ரப் சிகாப்தீனின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## அதிபர் சேவையில் உள்ளவர்களிடமிருந்து சேவை மூப்பு விவரம் திரட்டப்படுகின்றது

அச்சுவேலி, ஓக.29

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களின் சேவை மூப்பு விவரங்கள் கல்வி அமைச்சினால் திரட்டப்படுகின்றன.

இந்த விவ்ரங்களை திரட்டுவதற்கு என கல்வி அமைச்சு விண்ணப்பப்படிவம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பப் படிவத்தை சம்பந்தப்பட்ட சகலரும் வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்துதலுடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''செயலாளர், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்துடன் அதிபர் சேவை நிய...க்கடிதம், ஆசிரியர் சேவை நிய...க் கடிதம், அதிபர் - ஆசிரியர் கள் சேவை பதவியேற்ற 'சம்பள திரட்டின்'' உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, நிரந்தர நியமனக்கடிதம், வினைத்திறமைகாண் தடை தாண்டிய கடிதம் என்பன இணைத்து அனுப் பப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை உதயன் அலுவலகத்தில், பார்வையிடலாம். (202 - 11)

## ஆலயத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஓக. 29

சாவகச்சேரி செருகல்பதி விநாயகர் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை ஆலய வீதி சாவகச்சேரி நகர் மாதர் சங்கத்தினரால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

இதில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாதர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (203)

## கல்வியியற் கல்லூரி திங்களன்று ஆரம்பம்

கோப்பாய், ஓக. 29

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 3ம் தவணைக்கான கற்றல் செயற் பாடுகள் எதிர் வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளதாக பீடாதிபதி அறிவித்துள்ளார்.

ஆசிரிய மாணவர்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கல்லூரி விடுதிகளிற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-72)

## சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வங்கி வைப்பு புத்தகம் கையளிப்பு

சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தை யொட்டி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும், கும்பாபிஷேக மலர் வெளியீடும் நேற்று முன்தினம் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற 54 மாணவர்கள்க்கு தலா ஆயிரம் ரூபா வைப்புச் செய்யப்பட்ட இலங்கை வங்கி கணக்குப் புத்தகமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் மாணவர்களுக்கு இலங்கை வங்கி ச...கச்சேரி கிளையினால் தொப்பிகளு...ழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் உட்பட பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர். (1-207)

### கவனிக்குக

நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புமலர் V ஆம் பக்கத்தின் கவிதைப் பகுதியில் வர்ணப் பதிவுகள் மூன்று இடங்களில் அச்சாகவில்லை.

★ கலாபூசணம் மு.தணிகாசலம் (கற்கோவளம்) என்பவர் எழுதிய கவிதையின் தலையங்கம் **அடியவர்க்கு அருள்புரியும் ஆறுமுகா!** என்பதாகும்.


★ ச.பஞ்சாட்சரம் (சுதுமலை தெற்கு) என்பவர் எழுதிய கவிதையின் தலைப்பு கம் **''தேர் ஏறிக் காத்திடையா''** என்பதாகும்.

★ தேர் என்ற தலைப்பிலான கவிதையை எழுதிய **எஸ்.கவிதரன், சண்டிலிப்பாய்** ஆவார்.

### மரண அறிவித்தல்

**பொன்னையா இராசரத்தினம்**

*(முன்னாள் சாரதி, இ.போ.ச கோண்டாவில்சாலை)*



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டிச் சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் நேற்று (28.08.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலா தேவியின் அன்புக் கணவரும் மாலா (கனடா), கண்ணன் (கனடா), மாலதி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், கபிலன், சுபாசினி, தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கானுயா, காருண்ஜா, ஜெலக்சனா, கௌசிகா தனீதா, சபிரா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.08.2008) பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளப்பிட்டிச் சந்தி,*
*கொக்குவில்.* (77539)

தகவல்:
திருமதி **மாலதி தயாபரன்** (மகள்).

### எம் இனிய குடும்பத் தலைவரின் நினைவாக 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகிற்கு 07.07.1944



விண்ணுலகிற்கு 29.08.1997

**S.K.மனோகரரூபன்**

(நிர்வாகப் பங்காளர் - மனோகரன் அன் வெற்றிவேல்)

குடும்பத்தினர்.

### University of Jaffna
### Intensive Course in English and Information Technology - 2008
(Under the IBG of the IRQUE Project)

Interested students from among those who sat their Final Examinations in Arts or Management Studies and Commerce in the academic year 2006/07 and wish to follow the above courses are requested to register their names at the Local Technical Secretariat (LTS) Office of the IRQUE Project, University of Jaffna on or before 17.09.2008.

Director/LTS
IRQUE Project
University of Jaffna
28.08.2008

### கண்ணீர்க் காணிக்கை



எம் உயிர்தோழி
ஜயரூபியின் தந்தை
அமரர் V. தெய்வேந்திரமூர்த்தியின்
மறைவையிட்டு எம்
கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.
E/04.தோழியர்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமைகளுக்கான குரலை நசுக்கும் முயற்சி

நாட்டில் மிக மோசமடைநதுவரும் மனித உரிமை மீறல் நிலைவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காத அதிகார வர்க்கம், அந்த மனித உரிமை மீறல்கள் குறித்துக் குரல் கொடுக்கும் தரப்புகளின் குரல் வளையை நசிப்பது குறித்தே அதிகம் சிந்தித்து வருகின்றது.

மனோகணேசன் எம்.பிக்கு எதிரான பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் பலமணி நேர விசாரணையை அத்தகைய அடக்குமுறை நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே நோக்கவேண்டியிருக்கின்றது.

அதனையே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை எந்த வகையிலேனும் அடக்கி, ஒடுக்கி, அழித்து, அவர்களை நிரந்தர அடிமைகளாக்கி விடவேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கும் அதிகார வர்க்கம், அதற்காகப் பல்வேறு தந்திரோபாய யுத்த முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. அவற்றில் ஓர் உபாயமாகவே அரச பயங்கரவாதம் இங்கு அரங்கேறுகின்றது. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கை என்ற நியாயப்பாட்டின் கீழ் இங்கு கட்டவிழத்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்துடன் அதிகார வர்க்கத்தின் அரூபக் கரங்கள் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கின்றன என்பதும் வெளிப்படையானது.

இந்த அரச பயங்கரவாதமே, நாட்டில் மனித உரிமை மீறல்கள் - ஆள்கள் கடத்தப்படுதல், காணாமற் போகச் செய்யப்படுதல், சட்டவிரோதமான முறையில் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுதல், கப்பம் அறவிடப்படல் போன்றவை - இவ்வளவு தூரம் மோசமாக இடம்பெறுவதற்கான காரணம் என்பதும் அப்பட்டமான உண்மை.

அதிகார வர்க்கத்தின் ஆதரவில் - அல்லது ஆசியுடன் - அரங்கேறும் இந்தக் கொடூரம் பற்றிய விவரங்களை அம்பலப்படுத்தும் தரப்புகளின் குரல்வளையே இப்போது நசுக்கப்படுகின்றன.

அதிகாரவர்க்கத்தின் யுத்த வெறிப் போக்கு, அவற்றின் மோசமான விளைவுகள், பாரதூரமான கட்டத்தை அடைந்திருக்கும் கொடூரமான மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்துக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் முதலில் இந்த அடக்குமுறைக்கு இலக்காகும் துரதிஷ்டம் நேர்ந்தது.

பல ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்; பலர் தாக்கப்பட்டனர்; பல தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்; பலர் கடத்தப்பட்டுக் காணாமலும் போயினர். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன; மூடச் செய்யப்பட்டன. பல ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகால ஏற்பாடுகள் போன்றவற்றின் கீழ் சித்திரவதைக்கும் தொந்தரவுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

இவற்றின் காரணமாகப் பல ஊடகங்கள் மூடப்பட்டன. சில தாமாகவே மௌனித்தன. அரச பயங்கரவாதத்தின் பல்வேறு முகங்களாக விரியும் கொடூரங்களை அம்பலப்படுத்தவும், வெளிப்படுத்தவும் முடியாமல் பல ஊடகங்கள் அடக்கி வாசிக்கத் தலைப்பட்டுள்ளன.

பல ஊடகவியலாளர்கள் நமக்கேன் சிக்கல் என்று ஒதுங்கிக்கொண்டார்கள். பல ஊடகவியலாளர்களின் பேனாக்கள் அடங்கிப் போயின.

இப்படி நியாயத்தை - உண்மையை - மக்களுக்குப் பரப்புரை செய்யும் கடமைப்பொறுப்பிலிருந்து பெரும்பாலான - முக்கிய - ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் மௌனிக்கச் செய்வதில் வெற்றிகண்ட அதிகார வர்க்கம், அடுத்துத் தனது கவனத்தை இந்த மனித உரிமை மீறல்கள் குறித்து ஆணித்தரமாக சர்வதேசத்துக்கு - குறிப்பாக மேற்குலகுக்கு - எடுத்துக் கூறும் பொறுப்பிலிருக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மீது தனது பார்வையைத் திருப்பத் தொடங் கியிருக்கின்றது.

எதிர்க்கட்சிகளின் வரிசையில் இருந்தபடி மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் மனோ கணேசன், ஜயலத் ஜயவர்த்தன, விஜித ஹேரத், இராமலிங்கம் சந்திரசேகரன் போன்ற எம்.பிக்களுக்கு எதிராகவே அதிகாரவர்க்கத்தின் அரூபக் கரங்கள் இப்போது நீளத் தொடங்கியிருக்கின்றன.

சமாதான காலத்தில் - அமைதி ஒப்பந்தப் பேரவையில்- தென்னிலங்கையின் பல்வேறு தலைவர்களும் வன்னி சென்று, புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் மூத்த தலைவர்களைச் சந்தித்து வந்தனர் என்பது தெரிந்ததே.

அவர்களில் பலர் இன்று அரசுத் தரப்பில் இருக்கிறார்கள். சிலர் எதிர்த்தரப்பில் எஞ்சியுள்ளனர்.

அவர்களுள் - எதிர்த் தரப்பில் இருப்போரில் - மனித உரிமைகள் குறித்து அதிகம் குரல் எழுப்புவோர் மட்டும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முந்திய கிளிநொச்சிச் சந்திப்புக் குறித்து அவர்கள் 'நோண்டப்' படுகின்றார்கள்.

இவை எல்லாம், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஓயாது குரல் கொடுப்போரை நசுக்கும் அரசின் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்துவதில் நியாயம் இருப்பதாகவே படுகின்றது.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் குரல் கொடுத்த ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி., ரவிராஜ் எம்.பி., தி.மகேஸ்வரன் எம்.பி. போன்றோர் இந்த மண்ணிலேயே சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களின் குரல்வளையும் நசுக்கப்பட்டது என்பது தெரிந்ததே.

அந்த வகையில் மற்றொரு எத்தனம் மனோ கணேசன் எம்.பிக்கு எதிராக இப்போது எடுக்கப்படுகின்றதோ என்று எண்ண வேண்டி உள்ளது.

# அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வினைத்திறனை மேம்படுத்த ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் 'டயகோனியா' நிறுவனத்துக்கும் இணையத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று நேற்று வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

நேற்று நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

'டயகோனியா' நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் ஏற்கனவே அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தார். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் சார்பில் அதன் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், செயலாளர் வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன. அத்துடன் இணையத்தில் அங்கம் வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் பல்வேறு அபிவிருத்தி, கல்விசார் நடவடிக்கைகளும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அதன் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் நிதியுதவியுடன் செயற்பட்டுவரும் 'டயகோனியா' நிறுவனம் இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களினன் இணையப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(50-111)



இணையத்தின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், செயலாளர் வி.ஸ்ரீ சக்திவேல் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதையும் அருகில் சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அ.கி.சிவசுப்பிரமணியம், இணைய நிர்வாக அலுவலர் எஸ்.சோதிநாதன், 'சொண்ட்' பணிப்பாளர் எஸ்.செந்தூர்ராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: லக்ஷ்மன்)

## கோட்டை கிராம அறிமுக விழா ஞாயிறு

யாழ்ப்பாணம்,ஓக.25

இலங்கை வங்கியின் கோட்டைக் கிராம அறிமுக விழாவும் விளையாட்டு விழாவும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு கொட்டடியில் இடம்பெறவுள்ளன.

கோட்டை மீனாட்சி அம்மன் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திருமதி ஜெ.சகிலாதேவி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் கலந்து கொள்வார். (1)

# மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்போரை நசுக்கவே மனோ கணேசன் மீது விசாரணை

## எதிர்க்கட்சித் தலைவர் சீற்றம்

கொழும்பு,ஓக.29

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஓயாது குரல் கொடுக்கும் மனோ கணேசன் எம்.பியின் குரலை நசுக்கும் அரசின் சதித்திட்டத்தின் ஓரங்கமாகவே அவரிடம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணை அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்படும் அளவிற்கு மனோகணேசன் எந்தவிதக் குற்றத்தையும் செய்யவில்லை என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 24ஆம் திகதி சேதப்படுத்தப்பட்ட ஐ.தே.கட்சி எம்.பி. பாலித ரங்கே பண்டாரவின் ஆணமடுவ அலுவலகத்தை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்பே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரச ஆதரவில் செயற்படும் காடையர்களாலேயே இந்த அலுவலகம் நாசமாக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் நாம் செயற்பட்டு வருவதனாலேயே எம் மீது அரசால் இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

ஜனநாயகத்தை இல்லாதொழிக்கும் இவ்வாறான செயற்பாடுகளில் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அரசின் இச்செயற்பாடுகளுக்கு எதிராக நாம் ஒன்றிணைய வேண்டும்.

இது இவ்வாறிருக்க மனோ கணேசன் எம்.பியிடம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருக்கின்றனர். இந்த விசாரணை அரசின் திட்டமிட்ட சதி நடவடிக்கையாகும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மனோகணேசன் குரல் கொடுத்து வருகிறார். அவரது குரலை நசுக்குவதற்காகவே அவரிடம் இந்த விசாரணை நடத்தப்பட்டது.

பயங்கரவாதப் புலனாய்வு பிரிவால் விசாரிக்கப்படும் அளவிற்கு மனோ எந்தவித குற்றங்களையும் செய்யவில்லை - என்றார். (அ-சி)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று திருப்புகழ் அமுதம் இடம்பெறவுள்ளது.

பாட்டு எஸ்.கணபதிப்பிள்ளை, வயலின் - ஆர்.இராதாகிருஷ்ணன், மிருதங்கம் - எம்.சிதம்பரநாதன், முகர்சிங் - ரி.சண்முக சுந்தரம்.

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந் திருவிழா காலங்களில் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக் கிழமை 'விவேகானந்தர் காட்டிய வாழ்வு' என்னும் தலைப்பில் சைவப் புலவர் நித்தியதசீதரன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு சைவமகாசபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'கந்த புராணம்' தொடர் சொற்பொழிவில் இன்று 'சூரசங்காரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 14 | 30.08.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | பி.இ. 02.10 வரை |
| நட்சத்திரம் : | மகம் |
| | பி.இ. 01.59 வரை |
| | அமாவாசை விரதம் |
| சுபநேரம் : | 03.05 - 04.35 |
| ராகுகாலம் : | 09.05 - 10.35 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 . 07 . 1949



உதிர்வு 30 . 07 . 2008

## அமரர் முருகேசு திருஞானம் (நல்லையா)

தவமாய் தவமிருந்து தலங்களைத் தரிசித்து
எமை பெற்றெடுத்த அப்பாவே
உன் பிள்ளைச் செல்வங்களின் உயர்வுகண்டு
அகமகிழ்ந்து இருக்க வேண்டிய தருணத்தில்
காலனவன் புற்றுநோய் வடிவில் வந்ததேனோ
பட்டங்கள் பெற்று பதவிகள் நாம் வகித்தாலும்
உங்களை இழந்து துடியாய் துடிக்கின்றோமப்பா

(77519)

நி.முகவரி:
சிவன் கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு.

த.முகவரி:
45, புதிய சிவன் வீதி,
நல்லூர் வடக்கு.

மனைவி,
பிள்ளைகள்.

# வீடு விற்பனைக்கு

சுதுமலையில் Campus, Townக்கு அண்மையாக நன்னீர் வசதியுடைய சுற்றுமதில் மேல்மாடி கொண்ட புதிய பொழிவுடனான வீடு குருந்தடி பிள்ளையார் கோயில் அருகில் உடன் விற்பனைக்கு உண்டு. வாடகைக்கு தேவைப்படுவோரும் தொடர்பு கொள்ளலாம்.
T.P.071 5643967

# சமையல் வேலைக்கு ஆள் தேவை

1.வயது 30-40 வரையிலான பெண்
2.கல்வித்தகைமை - G.C.E O/L
3.25பேருக்கு சமையல் செய்யக்கூடிய முன் அனுபவம்.
4.காப்பகத்தில் தங்கும் வசதியும் உணவும் வழங்கப்படும்.
5.சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:10.09.2008

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்,
கேன் புற்று நோயாளர் காப்பகம்,
இல.5, சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில், சுன்னாகம்.

# பண்டாரவளையில் மனித எலும்புகள் மீட்பு

பண்டாரவளை, ஓக. 29

பண்டாரவளை, அம்பிட்டியகந்தைப் பகுதியில் இருந்து மனித எலும்பு எச்சங்கள் சிலவற்றைப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை மீட்டுள்ளனர்.

பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவற்றைத் தாம் மீட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எச்சங்களுக்கு அருகில் தலைமுடியுடன் கூடிய மண்டைஓடும் மற்றும் பெண்கள் அணியும் ஆடையின்சிலபகுதிகளும் காணப்பட்டன என்றும் - இதை வைத்துப் பார்க்கும் போதுஇது ஒருபெண்ணினுடைய எலும்பு எச்சமாக இருக்கலாம் என்றும் - பொலிஸார்மேலும்தெரிவித்தனர்.

இந்த எச்சங்கள் தொடர்பான விசாரணைகளை பண்டாரவளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (சி)

# சண்டிலிப்பாயில் 'கமநெகும' திட்டம்

நவாலி, ஓக. 29

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'கமநெகும' வேலைத் திட்டங்களில் பல பூர்த்தியடைந்துள்ளன.

மேலும் சில வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவையும் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார். (202-100)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

இணுவில் மேற்கு

## அமரர் நடராசா செல்வராசா

*(பொலிஸ் சார்ஜண்ட், வவுனியா)*

தோற்றம் 19.10.1948

மறைவு 10.09.2007

திதி:29.08.2008


கால வெள்ளம் கரைத்துச் சென்ற
எமது ஆன்மாவில் கலந்த அன்பின் ஊற்றே
கண்ணிலும் அரிய - எமது அன்புத் தெய்வமே
காலம் உம்மைக் கவர்ந்து சென்றாலும்
கனவிலும் நனவிலும் உமது நினைவால் வாடும்:

(சி/554443)

அன்பு மனைவி -
அம்பிகை,
பாசமிகு பிள்ளைகள் -
சிவகுமாரி (தர்சா),
ஜீவகுமாரி (ஜீவா).

இணுவில் மேற்கு.

# 32 ஆவது அகவையில் 18 ஆம் மாத நினைவலைகள்



## அமரர் இராசேந்திரம் இளஞ்செல்வன்

மண் மகிழ 29.08.1976

விண் நெகிழ 28.02.2007

எம் பிரிய அப்பாவே!
எம்மிடமிருந்து தங்களை அசுரர்கள் பிரித்த அந்த
வைகறைப் பொழுதிலிருந்தே
எம் இன்பம்,அமைதி,ஆரோக்கியம் எல்லாம்
அஸ்தமித்து விட்டதே
தங்கள் நினைவுடன் அவனியில் நிம்மதியின்றி
அல்லற்படுகிறோம்
நாமும் உம் அடிசேரும் வரை உம் சிந்தனைவழி
வாழ்வோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்டி வீதி,
சாவகச்சேரி.

[77514]

ம[illegible]வி,மகள்
மற்று[illegible]றவினர்கள்.

# மரண அறிவித்தல்



## பெரியான் கணபதி

ஆவரங்கால், புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் வடக்கு, மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியான் கணபதி நேற்று (28.08.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பெரியான் - புதியாள் தம்பதியரின் மூத்த மகனும் திரு.திருமதி சுப்பர் தம்பதியரின் வளர்ப்பு மகனும் வல்லிபுரம் - செல்லம் தம்பதியரின் மருமகனும் செல்லம்மா, அழகம்மா, மனோகரா, காலஞ்சென்றவரான திரவியம் (ராசா), அற்புதராணி, தவலிங்கம் (சுவிஸ்), பவானி, தயா ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராசா, சிவஞானம், கருணாநிதி, இராசதுரை, அன்பழகன், ஜினிதா (சுவிஸ்), தர்மகுலசிங்கம், ஈசன் ஆகியோரின் மாமனும் பைரவி, அப்புத்துரை, சின்னம்மா காலஞ்சென்றவர்களான சிதம்பரம், கனகன், சின்னத்தம்பி, பொன்னி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கவி, பகீரதன் (லண்டன்), செந்தூர் குமரன் (கோபி, லண்டன்), பரணிதரன், நிலாநிதன், சுமீலா (இத்தாலி), தரணிகா, திவ்யா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.08.2008) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

(77525)

தகவல்:
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



"இயேசு கிறிஸ்துவின்
இரத்தத்தினால்
உண்டான
இரட்சிப்பு, எமக்கு
புதிய
வாழ்வின் தொடக்கம்
உனது வாழ்வும்
முடிவு அல்ல"

எம் ஒளியே 'டேமி'
உமது குடும்பத்தினர் நாம்
ஒளி வேண்டி அலைகின்றோம்
மீண்டு வாராயோ....
உனைப் பார்க்க வேண்டும்.

## அமரர் யேசுதாசன் டேமியன்

அன்னை அணைப்பில் : 26.10.1975

ஆண்டவன் அணைப்பில் : 29.08.2006

2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி—நீர்வேலி இணைப்பு வீதியில் பாலம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.29

கைதடி-நீர்வேலி இணைப்பு வீதியில் பாலம் அமைக்கும் பணியினை அப் பகுதி பொதுஅமைப்புகள் மேற்கொண்டுள்ளனர்.

பாலம் அமைக்கும் பணியினை துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும்- மழைக்கு முன்னர் பாலத்தை அமைத்து முடிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பால வேலைகள் பூர்த்தியடைந்ததும் இவ் வீதி பிரதான போக்குவரத்து வீதியாக மாறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது இவ்வீதியினை மோட்டார் சைக்கிள், மிதிவண்டியில் செல்வோர் மட்டும் ப்யன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## வேலணை வடக்கில் நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.29

வேலணை வடக்கு, மயிலப்புலம் பகுதியில் நூலகம் ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அறிவொளி என்னும் பெயரில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த நூலக கட்டடத்திற்கான நிதி உதவியினை போரூட் நிறுவனம் வழங்கியுள்ளது.

விரைவில் மேற்படி நூலகம் வேலணை பிரதேசசபையூடாக பதிவு செய்து அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-95)

## பயணிகளால் தவறவிடப்பட்ட பைகள் மல்லாகம் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,ஓக.29

கப்பலில் பயணித்தவர்களால் தவறவிடப்பட்டபெண்களின்உடுபுடைவைகள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் அடங்கிய பைகள் மல்லாகம் நீதிமன்றில் தெல்லிப்பழை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் வேலை நாள்களில் பதிவாளர் முன்னிலையில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## மாவட்டத் திட்ட இணைப்பாளர் நியமனம்

நாவற்குழி,ஓக.29

வடக்கு மாகாண சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளராக த.கிருபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம் மாதம் தொடக்கம் இவருக்கு இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (20.2-288)

## கோப்பாய் பிரிவில் தொழில்நுட்பப் பயிற்சி

கோப்பாய்,ஓக.29

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.சற் நிறுவனத்தின் நிதி உதவியுடன் ''விதாதா'' வள நிலையத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட தொழில்திறன்நுட்பப் பயிற்சி நெறியை 5 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பெண்கள் பெற்று பூர்த்தி செய்தனர்.

இவர்களுக்கான சுயதொழிலுக்கான பெறுமதிமிக்க தொழில்நுட்ப உபகரணங்கள் அண்மையில் ''விதாதா'' வள நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்த உபகரணப் பொதியை பிரதம விருந் தினராக கலந்துகொண்டவலி.கிழக்குபிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் வழங்கினார். (202-72)

*வேலணை பிரதேச சபையின்—*

# நயினாதீவு உப அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 29

அடிப்படை வசதிகளற்ற ஒரு சிறிய கட்டடத்திலேயே வேலணை பிரதேச சபைக்குட்பட்ட நயினாதீவு உப அலுவலகம் இயங்கி வருகின்றது. எனவே இந்த அலுவலகத்திற்கென கட்டடம் அமைப்பதற்கு நிதி பெற்றுத்தருமாறு சபையின் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவர் ப.க.பரமலிங்கத்தை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வேலணை பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் நயினாதீவு உப அலுவலகம் அப்பகுதி மக்களுக்காண பூரண பணியினை உப அலுவலக பொறுப்பதிகாரி ந.மோகனரூபன் தலைமையில் வழங்கி வருகின்றது.

எனினும்-முழுமையான அபிவிருத்தியினை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் 100 வருடங்கள் பழமை வாய்ந்த வீடு போன்ற சிறிய கட்டடத்தில் நூலகம், நிர்வாகம், ஆயுள்வேத வைத்தியசாலை என்பன இயங்கி வருகின்றன.

எனவே முழுமையான மக்கள் பணியினை முன்னெடுத்து சிறந்த நூலகம், நிர்வாகம், இலவச ஆயுள்வேத வைத்திய சாலை மற்றும் மாநாடுகளை நடத்துவதற்கு நவீன வடிவிலான இரண்டு மாடிக் கட்டடம் அமைவதற்கு 23 மில்லியன் ரூபாவை வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெற்று உதவிபுரிய முன்வர வேண்டும்-என்றுள்ளது.

இதேவேளை புங்குடுதீவு உப அலுவலக அபிவிருத்திக்கும் இரண்டு மாடிக் கட்டடம் அமைக்க 18 மில்லியன் ரூபாவுக்கான திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது. (202-95)

# திண்மக் கழிவுகளை சரசாலையில் கொட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஓக. 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை மட்டும் சரசாலை வெளியில் கொட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சரசாலை வெளியில் வாகனங்களில் கொண்டு வரப்படும் திண்மக் கழிவுகள் கொட்டுவதற்கு சாவகச்சேரி பிரதேச சபையில் பணம் செலுத்தி அனுமதி பெறப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய வாகனத்தில் கொண்டு வரப்படும் திண்மக்கழிவுக்கு ஆயிரம் ரூபாவும், பெரிய வாகனத்தில் கொண்டு வரப்படும் திண்மக்கழிவுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படும்.

தென்மராட்சி பிரதேச மக்கள் யாழ். செயலகம், பருத்தித்துறை பிரதேசசபை மற்றும் தனியார் நிறுவனம் ஆகியவற்றிலுள்ள கழிவகற்றும் வாகனங்கள் மூலம் திண்மக்கழிவினை அகற்றலாமென பிரதேச செயலக அணர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

வடமராட்சி பிரதேசத்திற்கு முள்ளி வெளியிலும், வலிகாமம் பிரதேசத்திற்கு கல்லுண்டாய் வெளியிலும் திண்மக் கழிவுகள் கொட்டுவதற்கு இடங்கள் யாழ்.செயலகத்தினால் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# 19 வயது கரப்பந்தாட்டம்; சோமஸ்கந்தா மாகாண சம்பியன்

வவுனியா, ஓக. 29

வவுனியாவில் நடைபெற்றுவரும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாகாணச் சம்பியனானது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் மன்னார் அல்அஷியா கல்லூரியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற சோமஸ்கந்தா மாகாணச் சம்பியனானது. (1)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# குடாநாட்டு அபிவிருத்திப் பணிகளுக்கு சிவாஜிலிங்கம் எம்.பி. நிதி ஒதுக்கீடு

நல்லூர், ஓக. 29

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் 4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

யாழ்.மாநகரசபை முன்பள்ளிக்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும்-

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய புனரமைப்புக்குகென 50 ஆயிரம் ரூபாவும் நல்லூர் சி.சி.ஸ்தான தமிழ் கலவன் பாடசாலை திருத்த வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத் திற்கு ஒரு லட்சம் ரூபாவும் செங்குந்த இந்துக் கல்லூரிக்கான மின் இணைப்பு வேலைகளுக்கென 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார். (203- 111)

## நீர்வேலி மேற்கில் மாடுகள் திருட்டு

கோப்பாய்,ஓக.29

நீர்வேலி மேற்குப் பகுதியில் அண்மைக் காலமாக மாடுகள் திருட்டுப் போவது அதிகரித் துள்ளது.

தொடர்ந்து இவ்வாறு திருட்டுக்கள் இடம்பெறுவதால் தமது மாடுகளை மேய்ச்சலுக்கு விடமுடியாதுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் விவசாயி ஒருவரின் நல்லின மாடும்,கன்றும் களவுபோய் அப் பகுதி இளைஞர்களின் சாதுரியத்தினால் மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமை குறிப் பிடத் தக்கது. (202-72)





தென்மராட்சி பிரதேச முன் பள்ளிகளின் ஆக்கப்பொருள் கண்காட்சி அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கண்காட்சியினை மக்கள் வங்கி சாவகச்சேரி கிளைமுகாமையாளர் க.சண்முகலிங்கம் நாடா வெட்டி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

விருந்தினர்களான தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கோ. வரதராசமூர்த்தி, உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா, மீசாலை வீரசிங்கம் ம.வி. அதிபர் கு. சிவானந்தன் ஆகியோரும் பொதுமக்களும் கண்காட்சியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: தென்னவன்)*

## சமூக செயற்பாட்டு மையம் சிறுவர் கழகங்களுக்கு உணவுப் பொருள் உதவி

நவாலி,ஓக.29

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் 55 சிறுவர் கழகங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, சாவகச்சேரி, உடுவில், பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் சிறுவர் கழகங்களுக்கே பொருள்களை வழங்கியுள்ளது.

கடலை, பால்மா, சீனி, தேயிலை, பிஸ்கட் ஆகிய பொருள்களையே வழங்கியுள்ளது.

மேலும் இக் கழகங்களுக்கும் தெரிவு செய்யப் பட்ட முன்பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன என நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ம. தினேஷ்குமார் தெரிவித்தார். (202-100)

## யாழ்.ப.நோ.கூ. சங்க ஊழியர்களுக்கு இன்று விடுமுறை

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை சங்கக் கிளைகள் முழுநேரமும் திறந்திருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-224)

## வலி.மேற்கு அபிவிருத்தி செயலமலர்வு இன்று

யாழ்ப்பாணம்,ஓக.29

வலி.மேற்கு பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.யில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் கலந்து கொள்வார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் சிறப்பு விருந்தினராகவும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (1)

## தேர் கொட்டகைக்கு சித்திரப் படிக்கட்டு

கோப்பாய்,ஓக.29

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலயத்தில்தேர்கொட்டகைக்கானபுதிய சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய தேர் படிக்கட்டமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஆலய வெளி வீதியும் தார் இடப்பட்டு மீள்செப்பனிடப்பட்டுள்ளது. (202-72)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.29

கோண்டாவில் கிழக்கு, நாராயண வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் இன்று 42ஆவது சுக்கிரவார ஆன்மீக நிகழ்வு நடைபெறவுள்ளது.

கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என். தவராஜாவின் பகவத்கீதை உபந்நியாசம், பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும். (202)

## அலுவலகப் பணியாளர்களுக்கு பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.மாவட்ட அரச அலுவலர்களில் தற்காலிக, அமைய, பதிலீட்டு அடிப்படை, ஒப்பந்த அடிப்படை, ஆகியவற்றில் கடமையாற்றும் அலுவலகப் பணியாளர்களுகான பயிற்சி நெறிகள் எதிர்வரும் 4, 5, 6 ஆம் திகதிகளில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

பயிற்சிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

பயிற்சிநெறியின்போது வழங்கப்படும் சான்றிதழ் அவர்களின் பதவி நெறிப்படுத்தலின்போது கவனத்தில் எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மனம் மகிழ 03 ☆ 03 ☆ 1908



மனம் நெகிழ 12 ☆ 09 ☆ 2004

அமரர்

### வேலணையூர் அம்பலவாணர் செல்லையா அவர்கள்

- முன்னாள் அதிபர், சரஸ்வதி வித்தியாலயம், வேலணை.

முன்னாள் கிராம சபைத்தலைவர் - வேலணை -

**திதி : சதுர்த்தசி, 29.08.2008**

வேலணை யூர் அதிபர் மணி,
பெரிய வாத்தியார் எனும் பெருந்தகை
ஊருக்கு உழைத்த உத்தமன்
வாழ்வால் வாழ்ந்து காட்டிய வள்ளல்
நிறைவாழ்வு வாழ்ந்தவர்.
இந்த ஆண்டு உனக்கு நூற்றாண்டு விழா
நீர் எமைப் பிரிந்து நான்காண்டு சென்றாலும்
உங்கள் நினைவுடன் வாழும்

**நிரந்தர முகவரி:**
"இராசமகால்",
வேலணை கிழக்கு, வேலணை.
**தற்காலிக முகவரி:**
21, 1/1, நெல்சன்பிளேஸ்,
கொழும்பு - 06.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை ஞானம்மா

குடத்தனை, பொற்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை ஞானம்மா 27.08.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் தேவரட்ணம் (தேவகிளி), மேரிறெசிந்தா, மரியறீற்றா, டேவிட் ஆகியோரின் அன்புத் தாயும் மரியறீற்றா, அரியதாஸ், காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் லெற்றீசியா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.08.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித இராயப்பர் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குடத்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி,
குடத்தனை. (சி/554463)

தகவல்:
சி.குருசாமி.

## இதய அஞ்சலி

### வேலுப்பிள்ளை முத்துலிங்கம் J.P.

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் -
உரிமையாளர், தேவி அரிசி ஆலை, ஸ்ரீதேவி கொமினிக்கேசன் - அச்சுவேலி)**



*முத்து இன்று மறைந்துவிட்டாலும்; ஸ்ரீதேவி அருளால் எங்கள் நெஞ்சங்களில் எல்லாம் லிங்கம் உருவில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். மண்ணுலகில் பிறப்பவர் எல்லாம் விண்ணுலகம் செல்வது நியதி; ஆனால் நீங்கள் சொந்த முயற்சியால் உயர்ந்து பெரும் பொருள் சேர்த்தும் மிடுக்கின்றி ஏழை, பணக்காரர் என்ற பேதம் இல்லாமல் எல்லோருடனும் அன்புடன் பழகி; இல்வாழ்வான் இயற்றவேண்டிய நல் அறங்கள் எல்லாம் நோற்று 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, 'எல்லோரது உள்ளங்களிலும் இடம்பிடித்து விட்டீர்கள்! அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்!*

*எமது இராஜமாணிக்கம் கல்யாண மண்டப திறப்பு விழாவில் (2006ஆம் ஆண்டு) அச்சுவேலிக்கு பெருமை சேர்த்த பெருமக்கள் வரிசையில் உங்களைக் கௌரவித்தோம்.*

*''அச்சுவேலியில் முதன்முதலில் அரிசி ஆலையை ஆரம்பித்தவரும் தரமான அரிசியை தேவி அரிசி ஆலைமூலம் வழங்கி சேவையால் உயர்ந்த மனிதன்'' என உங்களைப் பாராட்டிக் கௌரவித்த வகையில் அச்சுவேலி மக்களும் நானும் பெருமை கொள்கிறோம்.*

*உங்களுடன் பழகிய நாள்களை மறக்க முடியுமா? மறக்கமுடியவில்லை. நினைத்து கண்ணீர்க் காணிக்கை செலுத்துகிறோம். உங்கள் மனைவி, மக்கள் எப்படி உங்கள் பிரிவைத் தாங்கிக் கொள்ளப்போகின்றனர். அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**வீடியோ கலாபினி,
அச்சுவேலி.**

(சி/554460)

## தேவை

நிறுவனம் ஒன்றின் உதவிக் கணக்காளர் பதவிக்கு கணக்கியல் தகைமை, அனுபவம் ஆங்கில அறிவுடைய ஒருவர் தேவை. பியோன் பதவிக்கும் ஆள் தேவை.
தொடர்பு: 0779530496,2222478

## வேலையாள்கள் தேவை

பதவி :- 1.காசாளர்
2.சிட்டை எழுதுநர்
மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு அனுபவமுள்ள பணியாளர் உடன் தேவை.
*தொடர்பு: சரஸ்வதி விலாஸ் சைவ உணவகம்
இல.70,பெரியகடை வீதி (கிராண்ட் பசார்)
யாழ்ப்பாணம்.* (சி/554456)

## முதியோர் உதவித் திட்ட அங்குரார்ப்பண வைபவம்

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் முதியோர் உதவித் திட்ட அங்குரார்ப்பண வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நாவலர் வீதியிலுள்ள நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன செயலாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்வார். (202)

## இராணுவத் தளபதி பங்களாதேஷில்

டாக்கா,ஓக.29

இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா பங்களாதேஷுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்குபற்றினார்.

இராணுவத் தளபதி ஜெனரல் மொயின் யு.அகமட், விமானப் படைத்தளபதி எஸ்.எம்.சாஹீர் ரகுமான் ஆகியோரைச் சந்தித்து இலங்கையின் இராணுவத் தளபதி கலந்துரையாடினர்.

இரு தரப்பு உறவுகள் தொடர்பாகவும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்தும் இக்கலந்துரையாடலில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ரணிலின் வாகனத்துடன் விபத்து பத்திரிகையாளர் படுகாயம்

புத்தளம்,ஓக.29

புத்தளம் ஆனமடுவ பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வாகனத்துடன் மோட்டார் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த பத்திரிகையாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

திவயின செய்தித்தாளின் டெரன்ஸ் வனிகசிங்க என்னும் பத்திரிகையாளரே இதன்போது காயமடைந்துள்ளார். அவரது காலில் பலத்த காயமேற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கபண்டாரவின் சேதமடைந்த வீட்டைப் பார்வையிட்ட பின்னர் எதிர்க்கட்சித் தலைவர்குறிப்பிட்ட பத்திரிகையாளரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த வேளையே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (சி)


# IIS

கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரவுகள் ஆரம்பம்

2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே விசேட கட்டணச் சலுகையில் அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | ஆரம்பம் | |
|---|---|---|
| பிரிவு 01. → | 05.09.2008 | காலை 10.00 மணி |
| பிரிவு 02. → | 06.09.2008 | |
| பிரிவு 03. → | 19.09.2008 | |
| பிரிவு 04. → | 20.09.2008 | |

கற்கை நெறிகள்



01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System.
10. Certificate in Auto CAD
11. Certificate in Java Programming
12. Certificate in Visual Basic Programming

"கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்கதுமான IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்."

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 693. E.Mail : iiscc@sltnet.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 03 1952



இறப்பு 10 09 2007

### அமரர் இராசதுரை புஸ்பவதி

*திதி: அபரபக்க சதுர்த்தசி (29.08.2008)*

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
மனிதருள் மாணிக்கமாய் பண்புடன் வாழ்ந்து
எம் எல்லோரையும் வாழவைத்த தெய்வமே
நல்லைக்கந்தன் தேர் ஏறி வரும் நன்நாளில்
உந்தன் உயிரும் கந்தன் பாதம்
சரண் புகுந்ததுவோ! அம்மா
ஆண்டு தோறும் கந்தன் தேரை
காணமுடியும் - அம்மா
ஆனால் உங்கள் முகத்தை காணமுடியாமல்
தவிக்கின்றோம்.

*24/3, சாஸ்திரியார் லேன்,
அரியாலை.*

குடும்பத்தினர்.

(சி/554459)

## ஓராண்டு நினைவஞ்சலி



*சரவணையூர்*

### அமரர் கதிரவேலு பொன்னுத்துரை

பிறப்பு 10-05-1915

இறப்பு 10-09-2007

**திதி: அபரபக்க சதுர்த்தசி**

*நல்லூரான் தேர் அன்று கந்தனவன் பதம் அடைந்தீர்களே ஐயா!
எதற்கும் பஞ்சமில்லாது பாசமுடன் பக்குவமாய் எமை வளர்த்தெடுத்து
ஆருயிர் துணைவனாய்! அன்மிகு தந்தையாய்! பாசமுள்ள மாமனாய்!
மழலைமொழி பேசும் பேரனாய்! உதவிக்கரம் நீட்டும் அயலவனாய்!
அரவணைக்கும் உறவினனாய்! வாழ்ந்து சென்றீர்களே!
போனதுவோ ஓராண்டு ஆனாலும் எம் ஈரவிழிகள் காயவில்லை!
நூறாண்டு ஆனாலும் மறப்போமா உமது அன்பை.*

தகவல்:
Ananthan (Germany)
Ananthan@cablemail.de (77405)

என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் கண்களைக் கட்டி முள்செடிகள் மீது படுக்க வைத்து கம்பிகளால் கொடூரமாகத் தாக்கியது இலங்கைக் கடற்படை

## சென்னை சென்றடைந்த மீனவர்கள் தெரிவிப்பு

ஆலந்தூர், ஒக. 29

இலங்கை கடற்படையினர் எங்களின் கண்களைக் கட்டி இருட்டறையில் அடைத்து வைத்துச் சரியாக உணவு தராமல் அடித்து - உதைத்துச் சித்திரவதை செய்தனர். முள்செடிகள் மீது படுக்கவைத்து இரும்புக் கம்பிகளால் கடுமையாகத் தாக்கினர்.

- இவ்வாறு இலங்கை கடற்படையால் விடுதலை செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் சென்னை சென்றடைந்த மீனவர்கள் கண்ணீர் மல்கக் கூறினர். .

விடுதலைப் புலிகளுக்கு வெடிமருந்துகள் கடத்திவந்தோம் என ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கூறியே இலங்கை கடற்படை தங்களைத் தாக்கியது - என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இதுதொடர்பாக வெளியான செய்திகள் வருமாறு:-

இராமேஸ்வரம் பாம்பன் பகுதியைச் சேர்ந்த 23 மீனவர்கள் 4 படகுகளில் கடந்த மே மாதம் 26ஆம் திகதி நள்ளிரவு மீன்பிடிக் கச் சென்றனர். கச்சத்தீவு அருகே மீன்பிடித் தபோது இலங்கை கடற்படை அவர்களைச் சுற்றிவளைத்துக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதையடுத்துத் தமிழக முதல்வர் கருணாநிதி மீனவர்களை விடுதலை செய்து தமிழகம் திரும்பி வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமருக்குக் கடிதம் எழுதினார். இதைத்தொடர்ந்து கடந்த மாதம் 25ஆம் திகதி 3 படகுகளில் 18 மீனவர்கள் இராமேஸ்வரம் திரும்பினார்கள்.

ஆனால் பாம்பன் பகுதியைச் சேர்ந்த இக்னேசியல் (வயது - 21), ஜோசப் (வயது - 18), ஈஸ்வரன் (வயது - 32), விஜயகுமார் (வயது - 24), செந்தில்வேல் (வயது - 30) ஆகியோரை விடுதலை செய் யாமல் பிடித்து வைத்துக்கொண்டனர்.

3 மாதங்களாகச் சிறையில் இருந்த இந்த 5 பேரும் கடந்த 7ஆம் திகதி விடு தலை செய்யப்பட்டனர். பின்னர் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள், 5 பேருக்கும் விமான ரிக்கெட் கொடுத்து சென்னை அனுப்பி வைத்தனர். நேற்று முன்தினம் மாலை அவர்கள் 5 பேரும் சென்னை வந்துசேர்ந்தனர்.

## ஒலிம்பிக் பொருள்கள் சீனாவில் ஏலம்

சீனாவின் கூடைப்பந்து வீரர் யோ மிங் பயன்படுத்திய படுக்கை உள்ளிட்ட 2 கோடி ஒலிம்பிக் பொருள்களை ஆயிரத்து 800 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்க திட்டமிடப்பட்டுள்ளது. சீனத்தலைநகர் பீஜிங்கில் 29 வது ஒலிம்பிக் போட்டி நடந்தது. இப்போட்டியில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் ஏலத்தில் விடப்பட உள்ளன. பொருள்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதால் அவற்றை ஏலம்விட இரண்டு ஆண்டு காலம் பிடிக்கும் எனத் தெரிகிறது.

பீஜிங்கில் உள்ள பங்கு வர்த்தக நிறுவனம், இந்த ஏலத்தை நடத்துகிறது. ஒலிம்பிக் துவக்க விழாவில் பயன்படுத்தப்பட்ட பழமையான இசைக் கருவி மற்றும் காயம் காரணமாக ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து வெளியேறிய சீன தடகள வீரர் லியு ஜியாங் பயன்படுத்திய மின்சாதனப் பொருள்கள் ஆகியன இந்த ஏலத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஏலத்தின் மூலம் சுமார் ஆயிரத்து 800 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வேதாரண்யம் மீனவர்கள் ஐந்து பேர் மாயம்: இலங்கைக் கடற்படை பிடித்துச் சென்றதா?

வேதாரண்யம், ஒக. 29

கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற நாகை மாவட்ட மீனவர் 5 பேர் கரை திரும்பவில்லை என்றும் அவர்களை இலங்கை இராணுவத்தினர் சிறைப்பிடித்துச் சென்றார்களா எனத் தூதரகம் மூலம் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு:-

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள செருதூரைச் சேர்ந்தவர் சிவசுப்பிரமணியன். இவர் கடந்த 23ஆம் திகதி உறவினர்கள் குப்புசாமி, பாலகிருஷ்ணன், ரமேஷ், ராஜீவ்காந்தி ஆகியோருடன் ஒரு படகில் கடலுக்குச் சென்றார். இவர்கள் 25ஆம் திகதி காலை கரைக்கு வரவேண்டும்.

ஆனால் நேற்றுவரை கரை திரும்பவில்லை. இதுபற்றி நாகை மீன்துறை உதவி இயக்குநர் உமாகாந்தனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் செருதூரைச் சேர்ந்த மீனவர்கள் அவர்களை 2 நாள்களாகத் தேடியும் எந்தப் பலனு ம் இல்லை.

இந்த நிலையில், 5 மீனவர்களையும் இலங்கை இராணுவத்தினர் சிறைப்பிடித் துச் சென்றார்களா எனத் தூதரகம் மூலம் விசாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பீகாரில் மழை-வெள்ள அனர்த்தம்; 50 பேர் பலி; 3 லட்சம் பேர் நிர்க்கதி

பீகார் மாநிலத்தில் மழை - வெள்ளத்துக்கு 50 இற்கும் அதிகமானவர்கள் பலியானார்கள். 3 லட்சம் பேர் இடம்பெயர்ந்து இருக்க இடமின்றி தவிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுதொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பீகார் மாநிலத்தில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக பலத்த மழை கொட்டி வருகிறது. இதன் காரணமாக நேபாள எல்லையில் உள்ள கோசி ஆற்றில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு ஏராளமான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இதேபோல் வடக்கு பீகாரில் உள்ள கங்கை காண்டக் உட்பட அனைத்துப் பெரிய ஆறுகளிலும் அபாயக் கட்டத்தைத் தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தொடர் மழை - வெள்ளத்துக்கு 50இற்கும் மேற்பட்ட வர்கள் பலியாகி உள்ளனர். 12 மாவட்டங்களில் 3 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான அராரியாவில் பல இடங்களில் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டதால் பல பகுதிகள் மாவட்டத் தலைநகரில் இருந்து துண்டிக்கப்பட்டன. வெள்ளத்தில் சிக்கித் தவித்தவர்களைப் படகுகளில் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

# இலங்கையுடன் வெற்றி; டோனிக்குப் பாராட்டு!

கொழும்பு, ஒக. 29

மகேந்திர சிங் டோனி அசாதாரணமான கப்டனாக விளங்குகிறார் என இந்தியத் தேர்வுக் குழுத் தலைவர் திலிப் வெங்சர்க்கார் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றதை அடுத்து டோனிக்கு அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை இடையிலான ஒருநாள் போட்டித் தொடரில் நான்காவது போட்டி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதில் இந்தியா முதலில் ஆடி 259 ஓட்டங்களைக் குவித்தது. சுரேஷ் டிரைனா 76 ஓட்டங்களும், கப்டன் டோனி 71 ஓட்டங்களும் குவித்தனர். முன்னதாகத் துவக்க வீரர் கோலி 53 ஓட்டங்களைக் குவித்தார். பின்னர் ஆடிய இலங்கை 212 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

இந்தியா 46 ஓட்டங்களால் இப் போட்டியில் வெற்றி பெற்றது. ஏற்கனவே 2- 1 என முன்னிலையில் இருந்த இந்தியா இந்த வெற்றியை அடுத்து 5 போட்டி கொண்ட இந்தத் தொடரை 3- 1 எனக் கைப்பற்றியுள்ளது.

இலங்கையில் முதல் முறையாக ஒருநாள் போட்டித் தொடரை இந்திய அணி வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியை அடுத்து கப்டன் டோனியை தேர்வுக் குழுத் தலைவர் திலிப் வெங்சர்க்கார் பாராட்டியுள்ளார்.

கப்டன் பதவிக்கு உரிய பண்புகள் அனைத்தும் டோனியிடம் இருக்கின்றன எனக் கூறியுள்ள அவர் கடந்த இரண்டு ஆட்டங்களில் டோனி அற்புதமாக ஆடியுள்ளார் எனவும் அவர் அசாதாரணமாகக் கப்டனாக விளங்குகிறார் என்றும் கூறியுள்ளார்.

மேலும் கோலி - ரைனா மற்றும் பத்ரிநாத் போன்ற இளம் வீரர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை அருமையாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.(த)

# யு.எஸ். ஓபனில் - பெடரர் வெற்றி! வீனஸ், செரீனா முன்னேற்றம்

நியூயோர்க், ஒக.29

யு.எஸ். ஓபன் டெனிஸ் தொடரை நடப்பு சாம்பியன் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் வெற்றியுடன் தொடக்கியுள்ளார். முதல் சுற்றுப் போட்டியில் ஆஜென்டினாவின் மேக்சிமோ கோன்சலாஸை அவர் எளிதாக வென்றார். பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் வீனஸ், செரீனா வில்லியம்ஸ் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினர்.

ஆண் டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான யு.எஸ். ஓபன் நியூயோர்க்கில் நடக்கிறது. ஆண்களுக்கான ஒற்றையர் முதல் சுற்றுப் போட்டியில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், அர்ஜன்டினாவின் மெக்சிமோ கோன்சலாஸை எதிர்கொண்டார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர் முதல் செற்றை 6:3 என வென்றார். இரண்டாவது செற்றிலும் முதல் ஆதிக்கம் செலுத்திய இவர், அதை 6-0 என எளிதாக கைப்பற்றினார். முன்றாவது செற்றையும் கைப்பற்றிய இவர், இறுதியில் 6-3, 6-0, 6-3 என்ற நேர் செற்களில் வென்றார்.

பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், உக்ரைனின் கத்ரினா போன்டரங்கோவை சந்தித்தார். இதில் செரீனா 6-1, 6-4 என வென்றார். மற்றப் போட்டிகளில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 6-2, 6-3 என ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரையும், ரஷ்யாவின் நாடியா பெட் ரோவா 6-2, 6-4 என பிரான்சின் ஆலிவியா சான்செஸையும், செக் குடியரசின் நிக்கோல் வைடிசோவா 6-1, 6-2 என கேநாட்டு வீராங்கனை பெட்ரா செட்கோவ்ஸ்காவையும் வென்றனர்.

ஆண்கள் இரட்டையர் முதல் சுற்றுப்போட்டியில் இந்தியாவின் பயஸ், செக் குடியரசின் லுகாஸ் டவுகி ஜோடி 6-7, 6-1, 6-4 என்ற செட்களில் ஸ்பெயினின் ஆஸ்கார் ஹெர்னாண்டஸ், ஆல்பர்ட் மொன்டன்ஸ் ஜோடியை வென்றது. (த)

# லிபியத் தலைவர் கடாபிக்கு லெபனான் பிடியாணை!

டமாஸ்கஸ், ஒக.29

லெபனானிய செல்வாக்கு மிக்க ஷியா மதகுரு ஷேக்மூஸா சத்ர், தமது லிபிய விஜயத்தின் போது காணமற்போனமை தொடர்பாக, லிபிய ஜனாதிபதி கேர்னல் கடாபி மீது லெபனான் குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன் லெபனான் கடாபியை கைதுசெய்வதற்கான பிடியாணையும் பிறப்பித்துள்ளது.

லெபனானிய செல்வாக்கு மிக்க ஷியா மத குருவான ஷேக் மூஸா சத்ர், லிபியாவில் காணாமற்போனமை தொடர்பாக, லெபனானிய அரசு, லிபிய ஜனாதிபதி கடாபி மீது குற்றஞ்சாட்டியுள்ளது. இம் மதகுரு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் லிபிய விஜயத்தை மேற்கொண்டார். எனினும் திரும்பவில்லை.

லிபியாவில் சிரேஷ்ட அதிகாரிகளின் உத்தரவுக்கிணங்க, ஷேக் மூஸா சத்ர் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற உறுதிப்பாடான நம்பிக்கை, லெபனானிலுள்ள ஷியாக்கள் மத்தியில் வேரோடிப்போயுள்ளது.

இது விடயத்தில் தலையிடுமாறு ஷியா அமைப்புக்கள், தற்போதைய லெபனா னிய அரசுக்கும் அழுத்தம் கொடுத்துள் ளன. அதற்கிணங்க அரசு இவ்விவகாரத் தைக் கிளப்பியுள்ளது. முன்னைய அரசு கள் இது தொடர்பாக எழுப்பி வந்த வினாக் களும், அவ்வப்போது லிபிய ஜனாதிபதி கேர்னல் கடாபியால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

லிபியாவுக்கு வருகை புரிந்த ஷேக் மூஸா சத்ர் தமது பரிவாரங்களோடு, பாதுகாப்பாக, ரோமுக்குச் செல்லும் விமானத்தில் திரும்பி விட்டார். அவருக்கோ, அவரது பரிவாரங்களுக்கோ இங்கு எத்தகைய ஆபத்தும் நேரவில்லை என லிபியா அவ்வப் போது குறிப்பிட்டு வந்துள்ளது.

எனினும் இதனை லெபனானிய ஷியா அமைப்புகளும் அரசினரும் அன்றும் இன்றும் ஏற்கவில்லை. திட்டமிட்டு ஆட்களைக் கடத்துவதிலும், போலிக் காரணங்களைச் சாட்டி, சிறைப்படுத்துவதிலும் கடாபி கைதேர்ந்தவர் என அவை அவர் மீது குற்றஞ் சாட்டியுள்ளன. இக்குற்றச் சாட்டும் நீடித்துக் கொண்டிருக்கிறது.

1978 ஆம் ஆண்டு, ஷியா மத குருவான மூஸா சத்ர், தமது இரு உதவியாளர்களுடன் லிபிய விஜயத்தை மேற்கொண்டார். எனினும் இவர்கள் திரும்பவில்லை. அங்கேயே மர்மமாக மறைந்துவிட்டார்கள். மூஸா சத்ர் 1929 இல் ஈரானில் பிறந்தவர். பின்னர் வந்து லெபானானில் குடியேறியவர். இங்குள்ள ஷியா சமூகத்தின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்தவர்.

மூஸா சத்ரே, லெபனானிய எதிர்க்கட்சியான அமால் கட்சியை நிறுவியவர். தற்போதைய நாடாளுமன்ற சபாநாயகர் நபிக் பேரியே, இக்கட்சியின் இன்றைய தலைவராக இருக்கின்றார். மூஸா சத்ர், செல்வாக்குப் படைத்த பெரும் பேச்சாளராகவும், மார்க்கத்துறையில் மேதையாகவும் திகழ்ந்தவர். ஷியாக்களை அரசியல் நீரோட்டத்தில் சங்கமிக்க வைத்தவர்.

இவரது அமால் இன்று லெபனானில் வலிமை மிக்க ஓர் அரசியல் அமைப்பாகத் திகழ்கிறது. மதகுரு காணாமற் போனமையை தொடர்பாக தற்போதைய லெபனானிய அரசால், லெபனானிய சட்டத்துக்கிணங்க, லிபிய ஜனாதிபதி கடாபியை கைது செய்வதற்கான பிடியாணை புதன் கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது .

குற்றஞ் சுமத்தப்பட்ட ஒருவர், பதில் அளிக்க சமுகமளிக்கத் தவறினால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க இச்சட்டம் அனுமதியளிக்கிறது.

## பாகிஸ்தான் எல்லையில் மோதல் 48 தீவிரவாதப் போராளிகள் பலி

இஸ்லாமாபாத், ஒக.29

ஆப்கான் எல்லையோடு ஒட்டிய பாகிஸ்தான் மேற்குப்பிராந்தியத்தில் தீவிரவாத போராளிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்டு வரும் அதிரடி தேடுதல் வேட்டையில் 48 பேர் கொல்லப்பட்டனர். பெருந்தொகையானோர் காயமடைந்தனர். இவர்கள் தலிபான் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டவர்கள் என நேற்று வியாழக்கிழமை, இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

இவர்கள் வெவ்வேறு மோதல்களில் கொல்லப்பட்டவர்கள். படைகளுக்கும் தீவிரவாதப் போராளிகளுக்குமிடையே, பல இடங்களில் கடும் மோதல்கள் இடம் பெற்றன. பஜூர் பகுதியில் விமானப்படை ஹெலிக்கொப்டர் மேற்கொண்ட வான் வழித் தாக்குதல்களில் 37 போராளிகள் கொல்லப்பட்டார்கள் என இராணுவப் பேச்சாளரொருவர், பி.பி.சி செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

தென் வசிரிஸ்தானில் இருதரப்புகளுக்குமிடையே துப்பாக்கிச் சமர் நடை பெற்றது. இதில் 11 போராளிகள் கொல்லப் பட்டார்கள். 23 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் 19 பேர் பிடிபட்டனர். தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாத நிலையில் ஏனையோர் பின்வாங்கி, மலைப்பிராந் தியக் காட்டுப்பகுதிக்குள் தலைமறைவாகிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நூல்நிலைத்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



கடந்த செவ்வாயன்று திருகோணமலைக் கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்திய புலிகளின் வானோடிகள் தலைவர் பிரபாவுடன்...

# கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்ற லங்காதீப பத்திரிகையின் புகைப்படப் பிடிப்பாளர் மாணவர்களாலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாலும் நேற்றுத் தாக்கப்பட்ட அதேவேளை, இது குறித்துக் கேள்வியுற்றவுடன் அங்கு விரைந்த சிரச ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

லங்காதீப செய்தியாளருக்கு பேட்டியளித்துக் கொண்டிருந்த மாணவனொருவனைப் படமெடுத்துக் கொண்டிருந்த வேளையே புகைப்படப்பிடிப்பாளர் ஜனக கலபதி தாக்கப்பட்டுள்ளார்.

மருத்துவபீட மாணவர் விடுதியைப் புகைப்படமெடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதால் மக்களின் இடம்பெயர்வும் அதிகரித்துள்ளது. ஆனால், இடம்பெயரும் மக்களை வவுனியாவில் தங்கவைக்க நாம் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

இடம்பெயரும் மக்களிடம் இது தொடர்பான தகவலை நாம் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிடப் போகிறோம். இவர்களை வவுனியாவில் தங்கவைப்பதன் மூலம்தான் இவர்களின் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்த முடியும்.

தற்போது இடம்பெயரும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள் களும் மருந்துப் பொருள்களும் தேவையான அளவு வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வன்னியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுவது முற்றிலும் பொய். தேவையான அளவு உணவுப் பொருள்கள் அங்கு கையிருப்பில் உள்ளன.

யுத்தம் மூலம் மக்கள் சிறிதளவேனும் பாதிக்கப்படவில்லை. கிழக்கில் மக்கள் எவ்வாறு எந்தவித ஆபத்துமில்லாமல் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டார்களோ அதேபோல் தான் வடக்கிலும் இடம்பெறுகின்றது.

புலிகளுக்கு ஆதரவான இணையத்தளங்களில் கூட மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் ஒரு புகைப்படத்தையேனும் காணமுடியாது. - என்றார்.

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணித்து பக்தர்களுக்கு அருள் காட்சி அளித்து 9 மணிக்கு இருப்பிடம் திரும்புவார்.

குடாநாட்டின் பல பகுதியில் இருந்தும் ஆலயத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இன்று கூடுவார்கள் என எதிர் பார்க்கப்படுவதால் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை மாநகரசபை போதிய அளவில் ஏற்பாடு செய்துள்ளது.

போக்குவரத்துச்சபை, தனியார் மினிபஸ் சேவை ஆகியன விசேட போக்குவரத்து வசதிகளை சகல பகுதிகளில் இருந்தும் நல்லூருக்கு ஏற்பாடு செய்துள்ளன.

ஆலயச் சூழலில் வழமை போல் இன்று தெய்வீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இதே வேளை நேற்று நடைபெற்ற சப்பறத் திருவிழாவுக்கும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர்.

## புலிகளை முற்றாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் இறுதித் தீர்வு என்றாலும் கூட அத் தீர்வை முன்வைப்பதற்கான பின்னணியை - உரிய சூழலைப் படையினர் ஏற்படுத்திக் கொடுக்காதவரை எந்தவிதமான அரசியல் தீர்வும் சாத்தியப்படாது என்றும் கோத்தபாய தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எமது யுத்தம் நல்லதொரு வெற்றிக் கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. கிழக்கைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி அந்த மாகாண மக்களுக்கு ஜனநாயக வாழ்வை அளித்ததுபோல் வடக்கு மக்களுக்கும் அளிப்பதே எமது நோக்கம்.

அந்த நோக்கின் அடிப்படையிலான வடக்கு நோக்கிய யுத்தம் வெற்றிக்கம்பத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

**எவ்வளவு காலத்திற்குள் யுத்தத்தை முடிக்க வேண்டும் என்ற திட்டம் உள்ளது**

அங்கு மன்னாரைக் கைப்பற்றிய எமது படையினர் இப்போது கிளிநொச்சிக்குள் நுழைந்துள்ளனர்.

வடக்கைக் கைப்பற்ற எவ்வளவு காலம் எடுக்கும் என்று சொல்லமுடியாது. இவ்வளவு காலத்திற்குள் வடக்கைப் பிடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்று காலவரையறை ஒன்றை விதிப்பது முட்டாள் தனமாகும்.

யுத்தத்தை எவ்வளவு காலத்திற்குள் முடிக்கவேண்டும் என்று எம்மிடம் ஒரு திட்டமுள்ளது. அந்தத் திட்டத்தின்படி நாம் செயற்பட்டு வருகிறோம்.

அந்தத் திட்டம் வெற்றிபெறுகிறது. யுத்தம் பற்றிய எல்லாத் தகவல்களையும் என்னால் விரிவாகக் கூறமுடியாது. ஆனால், யுத்தம் சரியாகவே இடம்பெறுகிறது.

**புலிகளின் விமானத்தாக்குதல் வெறும் பூச்சாண்டி**

படையினரை உளரீதியாக ஆட்டங்காண வைத்து எமது யுத்த வெற்றியைத் திசைதிருப்பலாம் என்று புலிகள் கனவு காண்கின்றனர்.

இந்த நோக்கில்தான் அவர்கள் திருகோணமலைத் துறைமுகத்தின் மீது சிறியரக விமானத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தினர். இதன்மூலம் எதையும் புலிகளால் சாதிக்க முடியாது. இது வெறும் பூச்சாண்டித்தனம் மாத்திரமே.

எம்மிடம் மிகவும் பயிற்சி பெற்ற பல வீரர்கள் உள்ளனர். அவர்களின் திறமைமிக்க யுத்த நடவடிக்கைகளைப் புலிகளால் ஒருபோதும் முறியடிக்க முடியாது.

தேசிய பிரச்சினைக்கு இறுதித் தீர்வு இராணுவத் தீர்வு அல்ல. அரசியல் தீர்வே இறுதித் தீர்வு. ஆனால், அந்த அரசியல் தீர்வை முன்வைப்பதாக இருந்தால் தற்போதைய இராணுவ நடவடிக்கை வெற்றிபெற வேண்டும்.

இராணுவ நடவடிக்கை மூலம் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி நல்லதொரு புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் மாத்திரமே ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு வெற்றிபெறும்.

அந்தப் புறச்சூழலை நாம் நிச்சயம் ஏற்படுத்திக் கொடுப்போம். கிழக்கைப் போல் வடக்கிலும் நல்லதொரு ஜனநாயகம் மலர நாம் வழிவகுப்போம். - என்றார்.(அ-சி)

## நாச்சிக்குடாவில் நேற்றும் ஹெலித்தாக்குதல்

கிளிநொச்சி மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேசங்கள் மீது நேற்றுக்காலை விமானப் படையினரின் எம்.ஐ. 24 ரக ஹெலிக் கொப்டர்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன என்று தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி, நாச்சிக்குடாவிலுள்ள விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகள் மற்றும் வெலிஓயா தண்ணி முறிப்புக் குளப்பகுதியிலுள்ள புலிகளின் பதுங்கு குழிகள் ஆகியவற்றின் மீதே இத்தாக்குதல்கள் மேற்கோள்ளப்பட்டன என்று படைத் தரப்பில் கூறப்பட்டது.

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் -

உணவு வேண்டுமென்றே நஞ்சூட்டப்பட்டிருக்கலாம் என்று தாங்கள் சந்தேகப்படுகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மஹியங்கன, தெய்யத்தகண்டிய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ள இராணுவத்தினரில் ஆறு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் 10 பேர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமாலை பொலநறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உட்கொண்ட உணவின் மாதிரிகள் கொழும்பில் உள்ள மருத்துவ ஆய்வு நிலையத்திற்கும், அரசு இரசாயனப் பகுப்பாய்வு நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-சி)

## பாலமோட்டையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகள் ஊடாக படையினர் இரு முனைகளில் மேற்கொண்ட முன்நகர் வினை தாம் முறியடித்ததாக விடுதலைப் புலிகள் அறி வித்துள்ளனர். இதில் ஏழு படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

பாலமோட்டை மற்றும் குஞ்சுக்குளம் பகுதி ஊடாக நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் படையினர் தமது பின்தளங்களில் இருந்து செறிவான ஷெல் வீச்சு மற்றும் சூட்டாதரவுடன் முன் நகர்வினை மேற்கொண்டனர் என்றும், இம் முன்நகர்வுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தீவிர எதிர்த்தாக்குதல் பிற்பகல் 4 மணி வரை நீடித்தது என்றும் புலிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

## வடக்கை மீட்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது:

கிழக்கு மாகாணத்தை புலிகளிடமிருந்து மீட்டெடுத்ததோடு அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும் அரச நடவடிக்கை எடுத்தது. தொடர்ந்தும் அப்பிரதேசங்களில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதே போல வடக்கிலும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமையவே இந்த உபகரணங்களை அரசு வழங்குகின்றது.

உண்மையில் இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை பூண்டோடு அழிப்பதையே அரசு தனது முழு நோக்காகக் கொண்டுள்ளது. கிழக்கைப் போன்று வடக்கையும் சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள குளங்கள் மற்றும் வீதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற வியவேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன என்றார் - இந்த விவரம் அரச தகவல் திணைக்களம் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Ram Communication

உங்கள் உற்றார் உறவினர்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டுக்கான தபால் பொதிகள், CD,VCD, உலர் உணவுப் பொதிகள் என்பவற்றை மிகக் குறைந்த நாள்களில் மிகக் குறைந்த கட்டணங்களில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும்.

* IDD Call மற்றும் விசேட சேவைகளான
* Browsing
* Photo Copy
* Internet - E. mail
* Laminating
* Typing
* Printing
* Scaning

மிகக் குறைந்த கட்டணத்தில்

மற்றும் இதர தேவைகளுக்கும்

இல:- 06, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Fax:- 021 222 2007
Tel:- 021 222 8428
E-mail:- n.Ramcom@yahoo.com

IDM After A/L

இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி

இலவச கணனிக் கருத்தரங்கு

A/L மாணவர்களுக்கான விசேட இலவச கணனிக் கருத்தரங்கு 30-08-2008 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.
அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்

021 222 9901
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
விபரங்கள் 01ம் திகதி உதயன் பத்திரிகையில்...
IBMS

# மரண அறிவித்தல்

## அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை



விடத்தல்பளையைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை நேற்று (28.08.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் (பிரான்ஸ்), யோகமூர்த்தி (ஜேர்மன்), யோகாம்பிகை, யோகறஞ்சி (ஆசிரியை, புத்தளம்), யோகானந்தன், யோகமனோகரி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), சின்னையா (இளைப்பாறிய அதிபர்), திருப்பதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லிங்கேஸ்வரன் (யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), மதுசுதன் (யாழ்.பல்கலைக்கழக மாணவன்), திருமதி தர்சி இராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இன்னும் மருமக்களும், பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் இவருக்கு உண்டு.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2008) வெள்ளிக்கிழமை கச்சாய் வீதி, கொடிகாமத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவித்தாழ்வு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகாம்பிகை (மகள்),
லிங்கேஸ்வரன் (பேரன்).

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 29.08.2008

## பக்தர்கள் துயர் போக்க இன்று தேரேறிவரும் நல்லைக் கந்தன்

''நல்லூரரைக் கும்பிட்டு நீபாடு-அதனால்
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்''

என்பது யோகர் சுவாமிகளின் திருவாக்கு. அடியார்களின் துன்பம் தீர்க்கும் நல்லைக் கந்தன் தேரேறி வரும் திருநாள் காண பல்லாயிரம் பக்தர்கள் நல்லையில் இன்று கூடுவர். ஈழத்துத் திருக்கோயில்களில் உன்னதமான வரலாறு கொண்ட ஒப்பற்றதலம்நல்லூர்க் கந்தசுவாமி கோயில். காலத்துத் தலம் எனப் போற்றப்படும் இத் திருத்தலத்தைத் தமிழ் வேந்தர் காலத்துத் தலத் தைப் பல்வேறு வரலாற்று நூல்கள் சிறப் பித்துக் கூறியுள்ளன. காலத்துக்குக் காலம் போரின் அனர்த்தங்களால் திருக்கோயில் அழித்து ஒழிக்கப்பட்ட போதிலும் அருள் நிறைந்த நல்லைக் கந்தன் அஞ்சேல் என்று திருவருள் பாலித்து எழுச்சிக் கோயிலாக நிமிர்ந்து நிற்பது அற்புதமே. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் முற்றாக அழித்த இக்கோயில் சற்று இடம் பெயர்ந்து புதுமையோடு பெருங்கோயிலாக எம்முன் காட்சியளிக்கின்றது. ஞானத்தின் அடையாளமாக விளங்குகின்ற வேலாயுதமே நல்லையில் கருப்பொருளாக நின்று அடியவர்களைக் காத்தருள்கிறது.



அந்நியர் ஆட்சிக் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்ட நல்லைக் கந்தன் திருக்கோயிலை நினைந்து அக்காலத்தில் வாழ்ந்த அடியவர்கள் மறைவாகத் தம் வீட்டினுள் வேலையும் நல்லூர்க் கந்தன் கோயில் இடிக்கப்பட்ட கற்குவியலில் இருந்து சிறுகற்களையும் எடுத்து வழிபாடு செய்தனர். சுமார் 250 வருடங்கள் இந்நிலையிலேயே நல்லூரான் அடியவர்கள் நல்லூரின் அழகை அகத்திலிருந்து வழிபட்டனர். சைவ சமயத்தவர்களுக்கு மத சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில், அழிக்கப்பட்ட ஆலயங்களை அகத்திலேயே சுமக்கும் மரபுதொடர்ந்தது. தந்தை, தாய், பேரன், பாட்டன் செவிவழியாக கோயில்கள் இருந்த வரலாற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லி, வீடுகளுக்குள்ளேயே நேர்த்தி வைத்து வழிபாடு செய்தனர். இந்நிலை இன்றும் எமது வாழ்க்கைச் சூழ்நிலையில் நிலவுவதை உணரலாம். உதாரணமாக ஐந்து தேர் வீதிவலம் வந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் பல லட்சம் மக்கள் ஒன்று கூடிய காட்சி இன்றைய தலைமுறைக்குத் தெரியாது.போரின் அனர்த்தால் பல வருடங்களாக மாவிட்டபுரம், கீரிமலை, நகுலேஸ்வரம் பழைய பொலிவை மக்கள் ஆயிரக் கணக்கில் பக்தர்கள் கூடும் நிலையும் மாறிவிட்டது. இன்றைய தலைமுறைக்கு பழைய கீரிமலை, மாவிட்டபுரத் திருக்கோயில் சிறப்புக்கள் வாய்மொழியாகக் குடும்பத்தவர்கள் சொல்வது வழக்கம். இவ்வாறே நல்லை வரலாறும் ஒரு காலத்தில் நிலவியது. 1734 ஆம் ஆண்டு தம் வீட்டில் வைத்து வழிபாடு செய்த வேலை சிறுகோயிலாகக் கட்டி வழிபாடு செய்தவர் ரகுநாத மாப்பாண முதலியார். அப் பெருந்தகை ஆரம்பித்த திருக்கோயிலே இன்று நாம் நல்லையிற் காணும் பிரமாண்டமான பெருங்கோயிலாகும். ஒல்லாந்தர் காலத்தில் ஒழித்துக் கும்பிட்ட வேல் மெல்ல மெல்ல ஒளிப் பிழம்பாகப் பிரகாசிக்கத் தொடங்கியது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1902 இல் மிகப்பெரிய மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டு மாடமாளிகையோடு கோயில் பெருங்கோயிலாகியது. காலந் தவறாத பூசை, கட்டுப்பாடு, சுத்தம், அழகு இவை ஆலயத்தின் அணிகலன்களாக அடியவர்களைக் கவர்ந்தன. ஆண்டு தோறும் ஆடி அமாவாசை முடிந்து ஆறாம் நாள் நல்லைக் கந்தன் கொடியேறி இருபத்திநான்கு நாள்கள் மகோற்சவம் நடைபெற்றுத் திருவிழா நிறைவு பெறும். யாழ். குடாநாட்டு மக்கள் மட்டுமின்றி இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பக்தர் கூட்டம் நல்லைக் கந்தனை வழிபாடு செய்வதற்கு உற்சவ காலத்தில் நல்லூரில் கூடுவது வழக்கம். 1980 களுக்கு முன் தொழில் நிமித்தமாக மலேஷியா, சிங்கப்பூரில் குடியேறிய ஈழத்தவர் நல்லூர் உற்சவத்தில் கலந்து கொள்வதற்குக் குடும்பம் குடும்பமாக வரும் வழக்கம் இருந்தது. 1983 முதல் நல்லூர் உற்சவ காலம் பதட்டத்தோடு கூடிய சூழலாக மாற்றம் பெற்றது. எனினும் நல்லூரைத் தேடி நாடி மக்கள் கூட்டம் வரும் வழக்கம் குடாநாட்டில் வற்றிப் போகவில்லை. பல லட்சம் பக்தர்கள் புலம் பெறர்ந்து உலகின் பல பாகங்களிலும் வாழ்கிறார்கள். தம் வீடுகளில் நல்லூர்க் கந்தனின் புகைப் படங்களை வைத்துப் பூஜிக்கின்றனர். எம் மண்ணில் சமாதான காலம் நிலவிய வேளை உலகின் பல பாகங்களில் இருந்தும் நல்லூர் உற்சவத்தைத் தசிரிப்பதற்குப் பலர் நாடித் தேடி வந்தனர். இன்று குடாநாட்டுக்கு வெளியே இருந்து நல்லூரை வழிபாடு செய்வதற்குப் போக்குவரத்து வசதி இன்றி அல்லற்படும் மக்

**சிறப்புக் கட்டுரை**

கள் ஆயிரமாயிரம். எவ்வளவோ பக்தர்கள் நல்லூரானை நினைந்து இன்று அகத்தில் அழுத வண்ணமாக உன்னைக் காண வழிசெய் என்று கேட்ட வண்ணமாக இருப்பர். நல்லையிலே குடாநாட்டில் வாழும் பல்லாயிரம் மக்கள் ஆறுமுகப் பெருமானை அழகுத் தேரில் இருத்தி, வடம் பிடித்து இழுத்து வாழ்வு கேட்பர். அல்லல் போக்கும் ஆறுமுகன் தேரேறி வரும் இத் திருநாளோடு எம் மண்ணில் அமைதி உண்டாக வேண்டும். எல்லோரும் நிம்மதியாகவும் சமாதானமாகவும் சஞ்சலமற்று வாழவேண்டும். என்ற அடியார்களின் ஆதங்கத்தை நல்லைக் கந்தன் தீர்த்து வைப்பான் என்ற நம்பிக்கையோடு அனைவரும் நல்லூரில் கூடி வழிபாடு செய்வோமாக.



***

செஞ்சொற் செல்வர்
**ஆறு. திருமுருகன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 29.08.2008

# வன்னத்தே ரேறிநீ வா!

*நல்லைப் பதியாளும் நாயகனே நாமடையும்*
*தொல்லைகளைத் தீர்க்கத் துணியாயோ - எல்லையிலாத்*
*துன்ப துயரத்தைச் சூழும்போ ரைத்துரத்தி*
*இன்பசுகம்சேவாய் இனி.*

*தேரேறி வந்திடும் செந்தமிழ்த் தெய்வமே*
*போரேறிச் செல்நிலையைப் போக்காயோ - வேரேறி*
*மண்ணில் நிலைகொண்ட மானுடரே யம்மலரும்*
*வண்ணம் அருளநீ வா!.*

*செந்தமிழ்க் கந்தனே சிந்தையால் வந்துனது*
*சந்தனப் பாதங்கள் சார்கின்றேன் - நொந்துருகும்*
*உன்தமிழ் அன்பரவர் உய்யும் வழிகாட்ட*
*வன்னத்தே ரேறிநீ வா.*

**- சிற்பி.**

## தேரழகு
*(காவடிச்சிந்து)*

ஆறுமுகன் அன்பர்களைத் தேடிவரும் நேரமிது
ஆலயத்தைச் சூழப்பெருங் கூட்டம் - பக்தர்
ஆடிவரும் காவடியின் ஆட்டம்
ஏறிவரும் தேரழகு ஏந்திவரும் வேலழகு
ஈழமெங்கும் பாலனிவன் ஆட்சி - அதற்கு
இந்த நல்லூர்க் கோயிலொன்றே சாட்சி
நீறுபட முப்புரமும் சீறிய பரம்பொருளின்
நெற்றி விழி வந்ததிரு மைந்தன் - எங்கள்
நெஞ்சில் விளையாடும் குகன், கந்தன்
ஆறுதலை வேண்டியவன் காலடி அடைந்தவருக்(கு)
ஆயிரம் துயர்வரினும் நீங்கும் - அவர்
ஆயுளும் உடல்நலமும் ஓங்கும்!

**- சோ.பத்மநாதன்**

## மானுடம் தேற மால் மருகா தேரேறு!

வடிவின் பொருளே வல்ல அருளே
வா எம் கந்தா தேரேறி
விடிவின் வடிவாய் விளைவுப் பொருளாய்
வினை தீர் அழகே நல்லூரா
இடரின் முகங்கள் இன்றும் இன்னும்
இருக்கும் இன்னல் களைந்தோட - உன்
வடம் பிடித்திரங்கி வணங்கினோம் ஐயா
வல்லருள் தந்து வாழ்விப்பாய்

சூர பகைமை தீர்த்தவீர
சுந்தர மகனே கந்தையா
சீராய் மனிதர் சிந்தை யாவும்
சிறக்க வைஎம் சிவபாலா
பாரம் நீங்கி பசிகள் அகன்று
பாரில் மனிதம் மேலோங்க
ஓரக் கண்ணருள் ஒளியாலே நீ
ஒரு முறை, பார் இடர் தீருமையா!

**- மானிப்பூர் ரட்ணேஸ்**


Technopark
GameZone
maximum Games
PC Sales
PC Repairing
Accessories
Printing , Scanning
Domain Name Registration
Web Designing & Hosting
*தேரேறி வரும் முருகா! மக்கள் துயர் களைத் போக்கிடவே வா முருகா!*
Techno PARK
127/2. K.K.S. Road
Kokuvil Junction.
Jaffna.



இன்று தேரேறி வருகின்ற திருமுருகா!
என்றும் எம் அமைதி காத்திட
வருவாய் முருகா!
குறைந்த விலைகளில் தரமான கணனிகளையும், கணனி உதிரிப்பாகங்களையும், மற்றும் கணனி சம்பந்தமான பழுதுகளையும், Computer Printing, Photro copy, Scanning, Laminating, உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்புகளையும் Fax வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
**கணனி வகுப்புகள்**
MS Office, Auto CAD, D.T.P, Accounting Package, Hardware Technology, போன்ற டிப்ளோமா கற்கை நெறிகளும், தரம் 3 - 8 வரையான மாணவர்களுக்கு **KIDS Program.**
*Certificate in Internet Technology (2 weeks) 1000/-*
குறைந்த செலவில் தரமான சேவைகளுக்கு
*STR COMPUTER SYSTEM*
*380, NAVALAR ROAD, NALLUR, JAFFNA*
தொலைபேசி / Fax :- 0214590775



நல்லூர் திருவிழாவை முன்னிட்டு
கோயில் வளாகத்திலுள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை
விற்பனைக்கூடத்திற்கு
விஜயம் செய்யுங்கள்

எமது புதிய வெளியீடுகள்
படித்து பயன்பெறுங்கள்..










ஜீனியஸ்
மாணவர்களுக்கான அறிவுக்களஞ்சியம்
மாதம் இருமுறை

இசை உலகம்
இசை, இசைக்கலைஞர்கள் பற்றிய தகவல்களுடன்
மாதம் இருமுறை

சுகவாழ்வு
ஆரோக்கிய வாழ்வுக்குரிய தகவல்களுடன்
மாதம் ஒருமுறை

சோதிடகேசரி
ராசிபலன், ஜோதிட கட்டுரைகளுடன்
மாதம் ஒருமுறை

**கிடைக்குமிடங்கள்**
பூபாலசிங்கம் புத்தகசாலை, 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 2226693
வீரகேசரி கிளைக்காரியாலயம், 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 2222730


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Express Newspapers (Ceylon) Limited P.O. Box 160. Colombo

# நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 29.08.2008

## நாயகனே தேரேறு!

இல்லை இடரென்று நாமும் நிறைந்தாட
எழிலவனே தேரேறு!
தொல்லை தவிர்ந்தின்ப நலமும் பெருகிட
தூயவனே தேரேறு!
வல்லை வினையோட நாளும் உனைப்பாட
வல்லவனே தேரேறு!
நல்லைப் பதியேகி நாமும் வடம்நாட
நாயகனே தேரேறு!

- தென்புலோலியூர் பரா.றமேஸ்



## தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதும்




நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி

தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை - நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம் வணங்கும் - நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று - யோகர் சுவாமிகள்.


கந்தனே!
கடம்பனே!
மயில் வாகனனே
தேரேறி வருக...

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வர்ணங்களை **கந்தவேலன்** COLOUR BANK நினைந்திடும் வர்ணங்களில் முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட சேர்க்கையில் உங்களுக்கு வழங்குகிறது. உங்கள் வர்ணப்பூச்சு தேவைகள் அனைத்திற்கும் மல்ரிலைக் பெயின்ற் விற்பனையில் முன்னணியில் நிற்பவர்கள்




கந்த வேலன் வர்ண வங்கி
Kanth Velan Colour Bank
இல. 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



தேரேறிவந்து தமிழ் மக்களின் இன்னல்களை தீர்த்திடுவாய்...



➪பேபி சூட் ➪பேபி புறக்
➪சல்வார் கமிஸ்
திருமணப் பட்டுப் புடைவை
➪சாறி வகைகள்
➪ஸ்கேட் & பிளவுஸ்
➪ சேட்டிங் சூட்டிங்
➪சேட்ஸ் பட்டு வேட்டிகள்

அஸ்விதா ரெக்ஸ்
ASVITHA TEX
27, NEW MARKET, JAFFNA.
27, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ட்ரெஸ் கோணர்
Dress Corner
99, Grand Bazaar, Jaffna.
99, பெரியகடை, யாழ்ப்பாணம்.





Be a Happy Saver

ரூ. 1,000,000 பெறுமதியான ஆயுள் காப்புறுதி

14.5% வரையான வட்டி வீதம்



வைப்பிற்கும் வட்டிக்கும் முழுமையான அரச உத்தரவாதமும்

NSB HaPPY SAVINGS

National Savings Bank

தேரேறி வந்து மக்கள் துயர் போக்கிடுவாய் கந்தா!



**NSB HAPPY SAVINGS** பற்றி நீங்கள் இரு முறை சிந்திக்கத் தேவையில்லை, ஏனெனில் இது உங்களுக்கு அதிக வட்டியையும் விசேட வரப்பிரசாதங்களையும் மாத்திரமன்றி உங்கள் வைப்புகளுக்கும் வட்டிக்கும் முழுமையான அரசாங்க உத்தரவாதத்தையும் சேர்த்தே தருகின்றது.

| வைப்புத் தொகை ரூ. | வட்டிவீதம் | வருடாந்த விளைவு வட்டி வீதம் |
|---|---|---|
| 1, 000 - 40, 000 | 5% | 5.1 |
| 40, 001 - 100, 000 | 10% | 10.5 |
| 100, 001 - 250, 000 | 12.5% | 13.2 |
| 250, 001 - 500, 000 | 13.5% | 14.4 |
| 500, 001 இற்கு மேல் | 14.5% | 15.5 |

**HAPPY SAVINGS** மூலம் வாழ்க்கை முழுவதற்குமான வரப்பிரசாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.

* வைப்புகளுக்கு மிகக் கூடிய வட்டி
* ரூ.1,000, 000/- பெறுமதியான ஆயுள் காப்புறுதி
* நிதி ஸ்திர தன்மைக்கு AAA (lka) தரச்சிறப்பை தொடர்ச்சியாக 6 முறையும் பெற்ற இலங்கையின் ஒரே வங்கி
* சுய தேவை கடன்கள் மற்றும் வைப்புகளுக்கு எதிரான கடன் வசதிகள்
* பணவைப்பு புத்தகங்களுக்கு பதிலாக கணக்குக் கூற்றுகள்
* இலவசமான ATM அட்டை
* கட்டுப்பாடற்ற மீளப்பெறல்கள்
* ரூ.5,000 வைப்புச் செய்து ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு கணக்கிற்கும் ரூ.2, 999 எனும் சலுகை விலையில் டயலொக் CDMA தொலைபேசி (மட்டுப்படுத்தப்பட்ட சலுகை)
* குறைந்த பட்ச வைப்பாக ரூ.1000/-த்துடன் இக்கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

NSB National Savings Bank

*வரப்பிரசாதங்கள் மற்றும் வட்டி வீதங்களில் முன்னறிவித்தல் இன்றி மாற்றங்கள் ஏற்படலாம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 29.08.2008


நல்லூர் நாயகனே! நலம் தர வா தேரேறி....

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற் களைக் கட்டிட - இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486

*கிளைகள்:* பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.


## உயர் பக்தி தெரியுதைய்யா...!

தேவிய ரிருவரோடு தேரேறி வருமுனது
திவ்விய தரிசனத்தால் சிந்தைகனி கூருதையா
பாவிலே இனிதானப் பக்திரசக் கீர்த்தனையைப்
பாடுகின்ற பாவாணர் பண்ணிசையும் மயக்குதையா
ஓவியப் பதுமைகள்போல் உட்கார்ந்து உன்நாமம்
உச்சரிப்போர் உதட்டசைவில் உயர்பக்தி தெரியுதையா
காவிய நாயகாவெம் கருதலரைத் தண்டித்துன்
தாருண் யமிதுவென்று காட்டிடுவாய் வேலய்யா!

சி.வெற்றிவேலு
வட்டுக்கோட்டை


தையல் இயந்திர வகைகள், உதிரிப்பாகங்கள்

தையல் வேலைகளுக்கும் தேவையான அனைத்துப் பொருள்கள்

தேரேறி வருக முத்துக் குமரா!

சேட்டிங், சூட்டிங்ஸ் மற்றும் எடுப்பான ஆண் / பெண் தையல் வேலைகளுக்கும் மிகக் குறைந்த விலையில் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய

சிற்றிசன் போய்ஸ் செலைக்சன் அன் ரெயிலறிங்

இல.01,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

PC PARK (PVT) LTD

the path to computer paradigm

"கணணியுலகில் புதியதோர் பரிணாமம்"

உங்கள் அபிமானத்தை பெற்ற Pc Park நிறுவனம் தன்நிகரற்ற சேவையில் என்றென்றும் உங்களுடன்.

hp intel Logitech ASUS ViewSonic Kingston

# 633,K.K.S Road, Jaffna.

Telephone: 021 2229581 Fax: 021 2229581 hotline: 0773068998

email: info@pcparkonline.com web: www.pcparkonline.com

Pointpedro Road, Nelliyadi. T.P: 021 226 4828

ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய பிரபல ஆசிரியர்களின் தமிழ், ஆங்கில (ENGLISH MEDIUM) மொழிமூலமான புத்தகங்கள், பயிற்சிகள், வினாப்பத்திரங்கள் மருத்துவ, தமிழ், ஆங்கில, சிங்கள அகராதிகள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் உட்பட இலங்கை, இந்திய நாவல்கள், சஞ்சிகைகள். உங்கள் தேவைகள் அனைத்தையும் நீங்களே தெரிவு செய்து பெற்றிடக் கூடிய வகையில் (விசாலமான இடவசதி) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது - பிந்திய பதிப்புக்களை முந்திப் பெறக் கூடிய வகையில் விரைவான விநியோகம் வினாப்பத்திரங்களை தபால் மூலம் பெறக்கூடிய வசதி நியாய விலை, அத்துடன் விசேட விலைக்கழிவு

யாழ் நகரின் மத்தியில் ஓர் புதிய உதயம்

அன்னை புத்தக சாலை

இல, 7 ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 021 222 9881

ஒரே கூரையின் கீழ்

சிறி நதியா நகைமாளிகை

இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

1 சானுயா சிறிரூபா நகைமாளிகை

இணை நிறுவனம்: சிறி நதியா நகை மாளிகை 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கந்தனே! நல்லைக் கடம்பனே! தேரேறி வருக... வருக... மக்கள் உள்ளங்களில் அமைதியைத் தருக... தருக...

Bata

24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் கம்பீரத் தோற்றத்துக்கு கபிலாவின் காலணிகள் மாத்திரமே....

★ நவீன மயமான நவநாகரீக பாதணிகள்

★ புதிய டிசைன்களிலான அழகிய காலணிகள்

★ மாணவர்களுக்கேற்ற புத்தம் புதிய மோஸ்தர்களிலான காலணிகள் பெற்றிட இன்றே நாடுங்கள்

கபிலா பாதணி அகம்

இல.13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 29.08.2008

அலைபாயும் மனத்தொரு ஆர்வமாய் நாடும்
அடியார்க்கு அருள் புரியும் ஆறுமுகா!
நல்லையில் நீ நின்றாலும் எங்களுக்கு
கருணைசெய்வாய் கற்பகமே போற்றி போற்றி!!
அல்லும் பகலும் உன்னை மனதால் வாழ்த்தி
உன் அடிபணிந்து கைகூப்பி வணங்குகின்றோம்
வல்லவனின் அருளால் வையமதில் புதுமை
விளைந்திடத் தேரேறி வருவாய்!

கலாபூசணம் மு.தனிகாசலம் கற்கோவளம்.

தேர் ஏறி தெருவெங்கும் உன் திருமுகத்தைக் காட்டிடையா
பாரினிலே பக்தர்களின் பசியைத் தீர்த்திடுவாய் ஐயா
ஆவணியில் உன் அருளைக் கண்டு பக்தர்கள்
ஆனந்தக் கூத்தாடி அருள் பெறுவார்களே!
ஆனந்தமாய் உன் அருளைக் காண
ஆண்டொன்று எப்பொழுது வரும் என்று
கனவினிலும் நனவினிலும் உன் அடியார்கள்
வெதும்பி நிற்க தேர் ஏறி ஆறுமுகனே
வேல் கொண்டு காத்திடையா....

ச.பஞ்சாட்சரம்
சுதுமலை தெற்கு.

## தேர்

தேரேறும்...
நல்லை நாயகனே
தேரடிதனில்
உன்னடி பணிந்து
விடியலின்
முகவரி தேடும்
விண்ணைப்பமிது
துயரின்
அதிர்வுகள்
இதயங்களைப்
பிளக்கின்றன...
இருளின்
எதிர்வுகள்
உதயத்தைத்
தடுக்கின்றன...
தேவர்கள்
குறைகேட்டு
வேலெடுத்து
துயர்துடைத்த
வேலவா...
ஊரும்
துயர் முடித்து
நாளும்
நலமோடு
வாழ்ந்திடவே
நல்லருள்
புரிந்திடுவாய்

சண்டிலிப்பாய.













